பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஆவணி 25 செவ்வாய்க்கிழமை (10-09-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:287

# கேணல் ராஜுவின் வித்துடலுக்கு குடாநாட்டில் இன்று இறுதி அஞ்சலி

## பிரதான வீதிகள் ஊடாக இறுதி ஊர்வலம், 7 இடங்களில் வீரவணக்கக் கூட்டங்கள்

யாழ்ப்பாணம்,செப்.10

சுகயீனம் காரணமாகச் சாவடைந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரும் கேணல் கிட்டு பீரங்கிப் படையணியின் சிறப் புத் தளபதியுமான கேணல் ராஜுவின் வித்துடல் பேழை இன்று மக்களின் இறுதி அஞ்சலிக்காக குடாநாட்டில் சகல பகுதிகளுக்கும் ஊர்வலமாக எடுத்துச்செல்லப்படும். ஏழு இடங்களில் வித்துடல் பேழை மக்கள் அஞ் சலிக்காக வைக்கப்படும்.

வன்னிப் பெருநிலப்பரப்பில் இருந்து இன்று காலை கண்டி வீதி ஊடாக எடுத்துவரப்படும் வித்துடல் பேழை கொடிகாமம் சந்தையில் அலங் கரிக்கப்பட்ட மண்டபத்தில் காலை 9 மணிமுதல் 10 மணிவரை மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும். பின்னர் வித்துடல் சாவகச்சேரி இந்துக் கல் லூரியில் முற்பகல் 10.30 மணிமுதல் 11.30 மணிவரையும் -

யாழ்.இந்துக் கல்லூரியில் பிற்பகல் ஒரு மணிமுதல் 2மணிவரையும் -

சுன்னாகம் சந்தையில் அலங்கரிக் கப்பட்ட மண்டபத்தில் பிற்பகல் 2.30 மணிமுதல் 3.30 மணிவரையும்-

அச்சுவேலி மகா வித்தியாலயத் தில் மாலை 4மணிமுதல் 4.30 மணி

(12ஆம் பக்கம் பார்க்க)



கேணல் ராஜுவின் வித்துடலுக்கு தலைவர் பிரபாகரன் அஞ்சலி செலுத்துகிறார்.





வித்துடல் பேழைக்கு தலைவர் பிரபாகரன் மலர்மாலை அணிவித்த காட்சி.

# சமாதான முயற்சிகளை ஆதரித்து தலைநகரில் திரண்ட ஜனசமுத்திரம்

## பலமுனைகளில் புறப்பட்ட பேரணிகள் மாநகரசபை மைதானத்தில் சங்கமம்

கொழும்பு,செப்ரெம்பர்10

**அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதான நடவடிக்கைகளுக்கு நேற்று கொழும்பு நகரில் ஒன்று திரண்ட ஜனசமுத்திரம் பூரண ஒத்துழைப்பை வெளிப்படுத்தியதோடு, நாட்டின் சமாதானச் செய்தியை முழு உலகுக்கும் அறிவித்தது. கொழும்பு நகரம் முன்னர் ஒருபோதும் காணாத அளவுக்கு நாட்டின் நாலாபுறங்களிலும் இருந்து மக்கள் இன, மத, அரசியல் வேறுபாடுகளின்றி வந்து குவிந்தனர். பின்னர் நான்கு முனைகளிலிருந்து ஊர்வலங்களாக மாநகரசபை வளவைச் சென்றடைந்தனர். அங்கு பிரமாண்டமான பொதுக் கூட்டம் நடைபெற்றது.**

சமாதானத்துக்கும் ஜனநாயகத் துக்குமான மக்கள் சக்திப் பேரணியை முன்னிட்டு நேற்று கொழும்பு நகரில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டிருந்தன. நகரப் பாட சாலைகள் நேரகாலத்துடனேயே மூடப் பட்டன. ஊர்வலங்கள் சென்ற வீதி கள், ஊர்வலங்கள் முடியும் வரை வாகனப்போக்குவரத்துக்கு மூடப்பட் டிருந்தன.

ஊர்வலப் பாதைகளைத் தவிர்த்து வேறு வீதிகளிலேயே பஸ் சேவைகள் இடம்பெற்றன.

மக்கள் சக்திப் பேரணிக்காக விசேட ரயில்கள், பஸ்கள் மூலமும் வேறுவாகனங்கள் மூலமும் கொழும்பு நகரின் சுற்றுப்புறங்களை வந்தடைந்த

(12ஆம் பக்கம் பார்க்க)

தலைநகரில் பேரணியில் திரண்ட ஜனத்திரளில் ஒரு பகுதியினர்.



# தமது சுயபலத்துடனேயே புலிகள் பேச்சு மேசைக்கு வந்துள்ளனர்!

## மக்கள் சக்திப்பேரணி முடிவில் பிரதமர் உரை

கொழும்பு,செப்.10

அன்று நாட்டை கூறுபோடும் நோக்குடன் போராடிய புலிகள் இன்று தமக்கு அதிகாரப்பகிர்வு வேண்டும் என்ற உயரியநோக்கோடு பேச்சு மேசைக்கு வந்துள்ளனர்.

இந்த சமாதான பேச்சு குறுகிய கால எல்லை வரையறைக்குள் அடங் கிய ஒன்றல்ல இது ஒரு நீண்டபய ணத்தின் ஆரம்பம்.

"புலிகள் நீண்டகாலப் போராட் டத்தின் பின் பல தியாகங்களுக்கு மத்தியில் சுயபலத்துடனேயே பேச்சு மேசைக்கு வந்துள்ளனர்."

- இவ்வாறு பிரதமர் ரணில் விக் கிரமசிங்க நேற்று கொழும்பு மாநகர சபை முன்றிலில் இடம்பெற்ற சமா தான மக்கள் சக்திப் பேரணியின் கூட்டத்தில் உரையாற்றும்போது கூறி னார்.

அவர் மேலும் கூறியதாவது:-

உலகில் கொடுமையான யுத்தங் களுக்கு முகம்கொடுத்த வியட்நாம், ஆப்கானிஸ்தான், யூகோஸ்லாவியா போன்ற நாடுகளில் இடம்பெற்ற அழிவு களை விட சாவகச்சேரி, வலிகாமம், கிளிநொச்சி போன்ற பகுதிகளில் கூடுதலான அழிவுகள் இடம்பெற்றுள் ளன. உலகில் ஊனமுற்றோரின்

(12ஆம் பக்கம் பார்க்க)

# ஹாட்லி,மெதடிஸ் கல்லூரிகள் நேற்று மீண்டும் ஆரம்பம்

கரவெட்டி,செப்.10

பருத்தித்துறை ஹாட்லிக் கல் லூரி, மெதடிஸ்த பெண்கள் பாட சாலை ஆகியன ஒருவார இடை வெளிக்குப் பின்னர் நேற்று மீண்டும் திறக்கப்பட்டன.

மிகக் குறைந்த எண்ணிக்கையான மாணவர்களே பாடசாலைக்கு வருகை தந்திருந்தனர். கீழ் வகுப்பு மாணவர் களே கூடுதலாக வந்திருந்தனர்.

பாடசாலைகளுக்கு முன்பாக உள்ள படையினரின் முன்னரங்க நிலையில் பொலீஸாரே பணியில் ஈடுபட்டனர். கண்காணிப்புக்குழுவின் அதிகாரியான எரிக் போல் அங்கு காணப்பட்டார்.

கடந்த வாரம் மாணவர்கள் நடத் திய போராட்டத்தின்போது அங்குள்ள காவலரண்கள் எரித்து சேதமாக்கப் பட்டதும் -

பொலீஸார் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை ஏவி மாணவர்களைக் கலைத்ததும்-

அதன் பின்னர் பாடசாலைகள் மூடப்பட்டிருந்ததும் -

தெரிந்தவையே. (ஜ-3-70-15-173)

## தலைமன்னாரில் கரையொதுங்கிய சடலம்!

மன்னார்,செப்.10

தலைமன்னார் பகுதியில் கரை யொதுங்கிய சடலம் ஒன்றை தலை மன்னார் பொலீஸார் மீட்டு மன்னார் ஆதார வைத்தியசாலையில் சேர்த்தி ருக்கின்றார்கள்.

மரண விசாரணை மேற்கொண்ட மன்னார் மாவட்ட நீதிபதி முறை

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# விளையாட்டு

## வட, தென்கொரிய கால்பந்தாட்டம் சமநிலையில் முடிவடைந்தது

வடகொரியாவுக்கும் தென்கொரியாவுக்கும் இடையிலான சிநேகபூர்வ கால்பந்தாட்டப் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

கடந்த 12ஆண்டுகளில் இவ்விரு நாடுகளுக்குமிடையில் கால்பந்தாட்டப் போட்டியொன்று நடைபெறுவது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கு முன்னர் 1993 இல் இவ்விரு அணிகளும் மோதின. அப்போட்டியில் தென்கொரியா 3-0 விகிதத்தில் வெற்றிபெற்றிருந்தது.

நேற்றுமுன்தினம் தென்கொரியாவின் சியோல் நகரில் இப்போட்டி நடைபெற்றது. போட்டியில் எந்தவோர் அணியும் கோல் அடிக்கவில்லை.

அண்மையில் நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டிகளில் தென்கொரியா நான்காவதுஇடம் பெற்றது. அவ்வணியில் இடம்பெற்ற 6 வீரர்கள் வடகொரியாவுடனான போட்டியிலும் பங்குபற்றினர்.

இருநாடுகளையும் மீண்டும் ஒன்றிணைக்கவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துவதாக இப்போட்டி அமைந்தது.

போட்டி ஆரம்பமாகும் முன் இரு அணிவீரர்களும் கைகளைக் கோத்த வண்ணம் வெள்ளை நிறப் பின்னணியில் நீலநிற கொரிய தீபகற்பத்தைக் கொண்ட ஐக்கிய கொடியுடன் மைதானத்திற்கு வந்தனர்.

"எந்த அணி வென்றாலும் பரவாயில்லை. நாம் ஒரே நாட்டவர்கள்" என்று எழுதப்பட்ட பாரிய பதாகையொன்று மைதானத்தில் காணப்பட்டது.

"கொரியா ஒன்றே" என எழுதப்பட்ட அங்கிகளை அணிந்த மாணவர்கள் அரங்கிலிருந்த பல்லாயிரக்கணக்கானோருக்கு ஐக்கிய கொரிய கொடிகளை வழங்கினர். (ஐ)

## இந்தியா-இங்கிலாந்து டெஸ்ட் தொடர்: ராகுல் திராவிட் இரட்டைச் சதம் குவித்தார்

இங்கிலாந்து அணியுடனான நான்காவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்திய வீரர் ராகுல்திராவிட் தொடர்ச்சியாக இரட்டைச் சதம் குவித்துள்ளார்.

சனிக்கிழமையன்று ஆட்டமுடிவின் போது 4விக்கெட் இழப்பிற்கு 315ஓட்டங்களைப் பெற்றிருந்தது இந்திய அணி. ராகுல் திராவிட் 131 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

ஞாயிறன்று அவர் 217ஓட்டங்கள் பெற்று ஆட்டமிழந்தார். முதல் தரப் போட்டிகளில் அவர் பெற்ற ஆகக் கூடுதலான ஓட்டங்கள் இவை.

இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 508ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இங்கிலாந்து அணி பந்துவீச்சாளர்களில் அன்ரூ கட்டிக் 114ஓட்டங்களுக்கு 4விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

ஞாயிறன்று மாலை இங்கிலாந்து அணி தனது 2ஆவது இன்னிங்ஸை ஆரம்பித்தது. அன்றைய ஆட்டமுடிவின்போது விக்கெட் இழப்பின்றி 114 ஓட்டங்களை பெற்றிருந்தது.

ட்ரெஸ்கொதிக் 58ஓட்டங்களுடனும், வோகன் 47ஓட்டங்களுடனும் ஆட்டம் இழக்காமல் இருந்தனர்.(ஐ)

## அமெ.ஓப்பன் டெனிஸ் செரீனா சம்பியன்

### மீண்டும் சகோதரியை வென்றார்

அமெரிக்க பகிரங்க டெனிஸ் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவில் செரீனா வில்லியம்ஸ் சம்பியனாகியுள்ளார். இறுதிப்போட்டியில் தனது மூத்த சகோதரியான வீனஸ் வில்லியம்ஸை 6-4, 6-3 விகிதத்தில் செரீனா தோற்கடித்தார். கடந்த சனிக்கிழமை இப்போட்டி நடைபெற்றது.

இவ்வருடம் இறுதியாக நடைபெற்ற கிராண்ட் ஸ்லாம் போட்டிகளான பிரெஞ் பகிரங்கத் தொடர், விம்பிள்டன், அமெரிக்கப் பகிரங்கத் தொடர் ஆகிய 3 தொடர்களிலும் செரீனா வில்லியம்ஸ் சம்பியனாகியுள்ளார்.

இம்மூன்று தொடர்களின் இறுதிப் போட்டியிலும் தனது சகோதரியான வீனஸை செரீனா வென்றமை குறிப்பிடத்தக்கது.

**சாம்பிராஸ் - அகாஸி மோதல்**

இதேவேளை, அமெரிக்கப் பகிரங்கத் தொடரின் ஆண்கள் ஒற்றையர் இறுதிப் போட்டிக்கு அமெரிக்க வீரர்களான பீட் சாம்பிராஸ், அந்ரே அகாஸி ஆகியோர் தெரிவாகியுள்ளனர்.

அரையிறுதிப் போட்டியில் பீட் சாம்பிராஸ், நெதர்லாந்து வீரர் ஜேங்ஸ் கெல்ஸனை 7-6, 7-5, 6-2 விகிதத்தில் வென்றார்.

மற்றோர் அரையிறுதிப் போட்டியில், அந்ரே அகாஸி, கடந்தவருடச் சாம்பியனான அவுஸி.வீரர் லேய்டன் ஹெவிட்டை 6-4, 7-5, 5-7, 6-2 விகிதத்தில் வென்றார்.

அகாஸி - சாம்பிராஸ் ஆகியோருக்கிடையிலான இறுதிப் போட்டி நேற்று நடைபெறவிருந்தது.

**இரட்டையர் பிரிவில் பூபதி - மிர்ன்யி சம்பியன்**

இத்தொடரின் ஆண்கள் இரட்டையர் பிரிவில் மகேஷ் பூபதி (இந்தியா)- மக்ஸ்ரஸின் மிர்ன்யி (பெலாரஸ்) ஜோடி சாம்பியனாகியது.

இவ்விருவரும் இறுதிப்போட்டியில், செக்குடியரசைச் சேர்ந்த ஜிரி நோவக்-ரடெக்ஸ்டெபனெக் ஆகியோரைத் தோற்கடித்தனர்.

சக நாட்டவரான லியாண்டர் பயஸுடன் இணைந்து மூன்று கிராண்ட் ஸ்லாம் பட்டங்களை வென்றவர் மகேஷ் பூபதி.

கடந்த ஏப்ரலில் அவர் மிர்னியுடன் ஜோடி சேர்ந்தார். இவ்விருவரும் இணைந்து பெற்ற முதலாவது சாம்பியன் பட்டம் இதுவாகும். (ம)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,செப்.10

சண்டிலிப்பாய் கல்விக்கோட்டப் பாடசாலை அணிகளுக்கிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறும் 18 வயதுக்குட்பட்டோருக்கான ஆட்டத்தில் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை அணியும், ஆனைக்கோட்டை றோ.க.பாடசாலை அணியும் பங்குபற்றுகின்றன.

14 வயதுக்குட்பட்ட அணிகளுக்கிடையிலான கால் இறுதி ஆட்டங்கள் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் இடம்பெறவுள்ளன. (ஜ-ரி-86)

★ ★ ★

யாழ்ப்பாணம்,செப்.10

உடுவில் கல்விக்கோட்டப் பாடசாலை அணிகளுக்கிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணி முதல் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்துகொள்ளும் அணிகளின் விவரம் வருமாறு:

14 வயதுப் பிரிவு

★ கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி எதிர் ஏழாலை மகாவித்தியாலயம்.

★ இணுவில் மத்திய கல்லூரி எதிர் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயம்.

16 வயதுப் பிரிவு

★ ஏழாலை மகாவித்தியாலயம் எதிர் இணுவில் மத்திய கல்லூரி.

18 வயதுப் பிரிவு

★ கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி எதிர் இணுவில் மத்திய கல்லூரி. (ஜ-ரி-86)

# மாநகரசபையின் கூட்டங்களை கூட்டுவதில்லை என மேயர் முடிவு

யாழ்ப்பாணம்,செப்.10

தனது கட்சி உறுப்பினர் ஒருவரால் தான் தாக்கப்பட்டது தொடர்பாக கட்சியின் தலைமைப்பீடம் தகுந்த நடவடிக்கை எடுக்கும்வரை மாநகரசபையின் மாதாந்தப் பொதுக் கூட்டங்களைக் கூட்டப்போவதில்லை என்று யாழ். மேயர் செல்லன் கந்தையன் அறிவித்திருக்கிறார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாநகரசபை உறுப்பினர் அரவிந்தனும் அவரது குழுவினரும் தன்னைத் தனது அலுவலகத்தில் வைத்து தாக்கினர் என்று மேயர் செல்லன் கந்தையன் முறையிட்டிருப்பது தெரிந்ததே.

தனது முறைப்பாடு தொடர்பாக கட்சியின் தலைமைப்பீடம் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்று மேயர் செல்லன் கந்தையன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தலைமைப்பீடம் உரிய நடவடிக்கை எடுக்கும்வரை மாநகரசபையின் மாதாந்தப் பொதுக்கூட்டத்தைக் கூட்டப்போவதில்லை என்றும் -

தேவை ஏற்படும் இடத்து நிதிக் குழுக் கூட்டத்தை மட்டும் கூட்டுவது என்றும் -

முடிவு செய்திருப்பதாக அவர் அறிவித்திருக்கிறார்.

இது தொடர்பாகக் கட்சியின் தலைமைப்பீடத்திற்கு நினைவூட்டும் வகையில் அவசர 'பக்ஸ்' செய்தி ஒன்றையும் நேற்றைய திகதியிட்டு மேயர் அனுப்பியுள்ளார்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ். மாநகர சபை முதல்வராகிய என்னை எனது கட்சியைச் சேர்ந்த மாநகரசபை உறுப்பினர் அரவிந்தன் மற்றும் அவருடைய குழுவினர் தாக்கியது தொடர்பாகத் தாங்கள் இதுவரை, எத்தகைய நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. இந்நிலையிலும் நல்லூர்க் கந்தனின் வருடாந்த மஹோற்சவம் எத்தகைய தடங்கலும் இன்றி சிறப்பாக நடைபெறவேண்டும் என்பதற்காக எத்தகைய பதில் நடவடிக்கையிலும் ஈடுபடாது பொறுமையாக இருந்தேன். தற்போது நல்லூர்க் கந்தனின் உற்சவம் முடிவுற்றுள்ளது. எனவே எனது முறைப்பாட்டை ஏற்று உடனடியாக தாக்குதல் மேற்கொண்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல் மாற்று நடவடிக்கைகளில் இறங்குவேன் - என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ-ரி)

## விஞ்ஞானச் சங்க கண்காட்சி

யாழ்ப்பாணம்,செப்.10

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் நடத்தும் விஞ்ஞானக் கண்காட்சி நாளை புதன்கிழமை தொடக்கம் காலை 9 மணிமுதல் பிற்பகல் 4 மணிவரை வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் நடைபெறவுள்ளது. (ஒ-ரி)

## 'சக்தி' சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம்,செப்.10

யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பும், 'சக்தி' சஞ்சிகை வெளியீடும் இன்று செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணிக்கு அதிபர் திருமதி ச.ஜெயராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஒலிபரப்பாளர் செல்வி சற்சொரூபவதி நாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வர். (ஒ-ரி)

## நாடாளுமன்றம் இன்று கூடும்

நாடாளுமன்றம் இன்று காலை 10 மணிக்கு கூடும். வீட்டுக் கூலி (சீர்திருத்த) சட்டமூலம் மீதான விவாதம் இன்று சபையில் நடைபெறும்.

இதற்கிடையே, புலிகள் இயக்கத் தடை நீக்கம் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தவேண்டுமா என்பது பற்றி இன்று காலை நடைபெறும் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும்.

இது தொடர்பாக விவாதம் நடத்தப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ ஏற்கனவே சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்திருக்கிறார் என்று எம்.பி. தினேஸ் குணவர்த்தன தெரிவித்தார். (ஐ)

## தவறவிட்ட ஆவணங்கள் கண்டெடுப்பு!

கிளிநொச்சி,செப்.10

மண்டதீவு 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த பிரான்ஸிஸ் பவுலப்பு கிருஷ்தி ராஜா என்பவரின் முக்கிய ஆவணங்கள் அடங்கிய கோவை ஒன்று கடந்த 6ஆம் திகதி கிளிநொச்சியில் கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சி யாழ்.சாலையில் உள்ள 'புலிகளின் குரல்' நடுவப் பணியகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் நேரில் சமுகமளித்து கோவையைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இவரின் தற்காலிகமுகவரி 'டாம்போ குடியிருப்பு, குமுழமுனை, பல்லவராஜன்கட்டு, பூநகரி' என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## வீதி விபத்தில் இருவர் காயம்!

இணுவில்,செப்.10

கோண்டாவில் சந்திக்கு அண்மையில் நேற்று முற்பகல் 8 மணியளவில் இடம்பெற்ற சைக்கிள்-மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் காயமடைந்தனர்.

சைக்கிளை ஓட்டி வந்த ரி.தர்மசீலன், மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்த த.விநோதரன் ஆகியோரே காயங்களுக்குள்ளாகினர். (ஒ-ரி)



'சக்தி எவ்.எம்.' ஒலிபரப்புச் சேவை குடாநாட்டுக்கு விஸ்தரிக்கப்படுவதை ஒட்டி நேற்று நடந்த அங்குரார்ப்பண நிகழ்வின்போது எடுக்கப்பட்ட படம். எம்.வி.சி.நெட்வேக் நிறுவனப் பணிப்பாளர் ஷிரான் மனுகுலசூரிய குத்துவிளக்கேற்றுகிறார். அருகே 'சக்தி எவ்.எம்.', சக்தி தொலைக்காட்சி ஆகியவற்றி விற்பனை முகாமையாளர் ரமேஸ் இராசநாயகம் காணப்படுகின்றார்.

## மாவட்டச் செயலாளர் நியமனத்துக்கு விண்ணப்பம் கோரியே இனித் தெரிவு

கொழும்பு,செப்.10

எதிர்காலத்தில் மாவட்டச் செயலாளர்களை நியமிக்கும்போது விண்ணப்பங்கள் கோரி தகுதியானவர்களைத் தெரிவு செய்வதென உள்நாட்டு அலுவல்கள், மாகாண உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் அலிக் அலுவிகார தீர்மானித்திருக்கிறார்.

இலங்கை நிர்வாக சேவையில் முதலாம் தரத்தில் குறைந்தது எட்டு ஆண்டுகள் சேவையைப் பூர்த்தி செய்திருந்தால் கடந்த ஐந்து ஆண்டுகளில் ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படாதிருத்தல் ஆகிய இரண்டும் பதவி நியமனத்தில் கட்டாயமாகக் கவனத்தில் கொள்ளப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

வெற்றிடங்களாக இருக்கும் அம்பாந்தோட்டை, நுவரெலியா, வவுனியா, கேகாலை, மாத்தளை ஆகிய மாவட்டச் செயலாளர்கள் பதவிகள் இப்புதிய முறைப்படியே நிரப்பப்படும் எனவும் அமைச்சர் அலுவிகார கூறியிருக்கிறார். (ஐ)

## தனியார் சங்கம்-புலிகள் இணைந்து யாழ்ப்பாணத்துக்கு பஸ் சேவை!

### அரசின் அனுமதிக்கு கோரிக்கை

கொழும்பு,செப்.10

தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்துடன் இணைந்து ஏ-9 பாதையில் கூட்டு பஸ்சேவை ஒன்றை ஆரம்பிக்க புலிகள் இயக்கம் முன்வந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

புலிகள் இயக்கத்தின் போக்குவரத்துத்துறைப் பொறுப்பாளர் குட்டியுடன் கடந்த 4ஆம் திகதி பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் பிரதிநிதியான அருணாசலம் ரவீந்திரன் இதுகுறித்து பளையில் பேச்சு நடத்தினார் என்றும் -

சங்கப்பிரதிநிதி விடுத்த கோரிக்கையின்பேரில் கூட்டு பஸ்சேவையை ஆரம்பிக்க புலிகள் இயக்கம் விருப்பம் தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது.

கூட்டாகவோ அல்லது தனியாகவோ பஸ்சேவை நடத்த அரசின் ஒத்துழைப்பு அவசியமானதாகும் எனவும் புலிகளின் பொறுப்பாளர் தெரிவித்தார் என்று கூறப்படுகிறது. இதனையடுத்து, சமாதானச் செயலகத்தின் தலைவர் பேர்னாட் குணதிலக ஊடாக நாளை பிரதமரிடம் விண்ணப்பம் ஒன்றைக் கையளிக்க சங்கம் நடவடிக்கை எடுத்திருப்பதாக சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்திருக்கிறார் (ஐ)

## வாந்திபேதி நோயாளிகள் மேலும் இருவர் அனுமதி

யாழ்குடாநாட்டில் பரவலாக பரவி வரும் வாந்திபேதி நோயின் தாக்கத்திற்குள்ளாகி நேற்றுமுன்தினம் இரவு இருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், ஈச்சமோட்டையைச் சேர்ந்த குணரட்ணம் ரமேஸ்குமார் (வயது20), மெலிஞ்சிமுனையைச் சேர்ந்த விக்னேஸ் பற்றிமா (வயது28) ஆகிய இருவருமே வாந்திபேதி நோய் தாக்கத்துக்குள்ளானவர்களாவர். இவர்களில் மெலிஞ்சிமுனையைச் சேர்ந்த நோயாளி மத சம்பிரதாய முறைப்படி மருந்து உட்கொள்ளாத நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. இந்த இருவருடன் சேர்த்து, இதுவரை 14பேர் இந்நோய்த்தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளனர் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இவர்களில் இருவர் உயிரிழந்தமை தெரிந்ததே.

இதேவேளை - வாந்திபேதி தாக்கத்துக்கு உட்பட்டிருக்கும் ஈச்சமோட்டை வாசியின் குடும்ப அங்கத்தவர்களுக்கு, தடுப்பு மருந்து கொடுக்கப்பட்டுள்ளது. அப்பகுதியிலுள்ள கிணறுகளுக்கு குளோரின் இட்டுச் சுத்தப்படுத்தும் நடவடிக்கைகளை யாழ்.மாநகர சபை சுகாதாரப் பகுதியினர் மேற்கொள்ளவுள்ளனர். (ஜ-ரி-15)

# ஈராக்குக்கு எதிரான நடவடிக்கைக்கு ஆதரவு வழங்க பிரான்ஸ் நிபந்தனை!

## ஐ.நாவுடன் இணைந்து செயற்படுமாறு அமெரிக்காவை வலியுறுத்துகிறார் ஷிராக்

லண்டன்,செப்.10

ஈராக்குக்கு எதிராக அமெரிக்கா எடுக்கக்கூடும் என்பது போன்று தோன்றும் இராணுவ நடவடிக்கைக்கு ஆதரவு வழங்க பிரான்ஸ் நிபந்தனை விதித்துள்ளது.

அமெரிக்கா ஈராக்குக்கு எதிராக எடுக்கும் எந்தவொரு நடவடிக்கையையும் ஐ.நாவுடன் இணைந்தே மேற்கொள்ளப்படவேண்டும். அவ்வாறு செய்யப்பட்டால் மட்டுமே பிரான்ஸ் அதற்கு ஆதரவு வழங்கும் என்று அதிபர் ஜக் ஷிராக் தெரிவித்தார்.

ஈராக்குக்கு எதிராக அமெரிக்கா நடவடிக்கை எடுப்பதற்கு ஐ.நா.பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பு நாடுகள் ஐந்தில் பிரிட்டன் மட்டுமே தற்போது ஆதரவு தெரிவித்துள்ளது. பிரான்ஸ், சீனா, ரஷ்யா ஆகியவை எதிர்ப்புத் தெரிவித்துவருகின்றன.

இவற்றின் ஆதரவினைப் பெற்றுக் கொள்ள புஷ் கடும் முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றார். பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்ற வகையில் ஆப்கானிஸ்தானுக்கு எதிராகப் போர் தொடுத்தபோது தன் பக்கம் ஒரு கூட்டணியை உருவாக்கியது போன்று ஈராக்குக்கு எதிரான போரிலும் உலக நாடுகளின் ஆதரவுக் குழு ஒன்றை ஏற்படுத்த புஷ் முயற்சித்து வருகின்றார்.

அதன் ஒரு கட்டமே ஐ.நா. பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்புரிமை நாடுகளின் ஆதரவைப் பெறுவது. ஆனால், பிரான்ஸ், ரஷ்யா, சீனா என்பன எடுத்த எடுப்பில் அமெரிக்காவுக்கு ஆதரவு வழங்கத் தயாராக இல்லை.

ஈராக்குக்கு எதிரான தனது நடவடிக்கைக்கு கனடாவின் ஆதரவைப் பெறுவதற்காக அதிபர் புஷ் நேற்று கனேடியப் பிரதமருடனும் பேச்சு நடத்தினார். ஆனால் அமெரிக்காவின் தன்னிச்சையான நடவடிக்கை எதற்கும் ஆதரவு வழங்கமுடியாது என்று கனடா தெரிவித்துள்ளது.

இதேவேளை -

ஈராக்குக்கு எதிராக அமெரிக்கா இராணுவ நடவடிக்கை எடுத்தால் அது "மிகப் பெரிய ஆபத்தாக" முடியும் என்று 'நியூயோர்க் டைம்ஸ்' பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் பிரான்ஸ் அதிபர் ஜக் ஷிராக் தெரிவித்துள்ளார்.

"அமெரிக்கா இப்படி தன்னிச்சையாக நடவடிக்கை எடுத்தால் தாய்வானுக்கு எதிராக சீனா இராணுவ நடவடிக்கை எடுக்கமுடிவெடுக்கும். ஏனெனில் தாய்வானால் தனக்கு அச்சுறுத்தல் என்று சீனா கூறுகின்றது. அதேபோன்று பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியா நடவடிக்கை எடுக்க முடிவுசெய்யும். இவற்றை எல்லாம் ஏற்றுக்கொள்ளமுடியுமா?" - என்று ஷிராக் அப்பேட்டியில் கேள்வி எழுப்பியுள்ளார். (ம)



பாரசீக வளைகுடாவில் ஈராக் மீதான தாக்குதலுக்கு தயார் நிலையில் இருக்கும் யு.எஸ்.எஸ். வாஷிங்ரன் விமானம் தாங்கி கப்பலில் இருந்து பயிற்சிக்காக புறப்பட்டுச் செல்லும் போர் விமானம் ஒன்று. ஆப்கானிஸ்தான் மீதான அமெரிக்காவின் தாக்குதலில் மிக முக்கிய பங்கை வகித்தது இக் கப்பலே.

## பப்புவா நியூ கினியாவில் நேற்று பெரும் நிலநடுக்கம்

லண்டன்,செப்.10

பசுபிக் தீவான பப்புவா நியூகினியாவில் நேற்றுக்காலை பெரும் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

ரிச்டர் அளவு கோலில் 7.5 புள்ளியாகப் பதிவான இந்த நிலநடுக்கத்தால் அங்கு பெரும் சேதங்கள் ஏற்பட்டுள்ளன. ஆனால், அதிகளவான உயிர்ச்சேதங்கள் ஏற்படவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை 3 பேர் உயிரிழந்துள்ளனர் என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கட்டடங்கள், பாடசாலைகள், வீடுகள் என்பன இடிந்து தரைமட்டமாகியுள்ளன. இதனால், பல கோடி டொலர் மதிப்புள்ள சொத்துக்கள் அழிந்துள்ளன.

1998இல் பப்புவா நியூகினியாவில் ஏற்பட்ட மிகப்பெரிய நிலநடுக்கத்தால் அங்கு 2 ஆயிரம் பேருக்கு அதிகமானவர்கள் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## ஆப்கான் அதிபர் ஹர்சேயின் பாதுகாப்பு மீள்பரிசீலனை

ஆப்கான் அதிபர் ஹமிட் ஹர்சே தனது பாதுகாப்புக் குறித்து மீள் பரிசீலனை செய்யுமாறு உத்தரவிட்டுள்ளார். இது தொடர்பான அவசர கலந்துரையாடல் ஒன்றையும் அவர் நடத்தியுள்ளார்.

திருமணவீடு ஒன்றுக்குச் சென்றபோது ஹர்சேயைக் கொலை செய்வதற்கு ஆயுததாரி ஒருவர் முயன்றதைத் தொடர்ந்தே அதிபர் தனது பாதுகாப்பை மீள்பரிசீலனைக்குட்படுத்தியுள்ளார்.

அதிபரைக் கொல்வதற்கு முயன்ற ஆயுததாரியை அவரது அமெரிக்க மெய்ப்பாதுகாவலர்கள் சுட்டுக்கொன்றனர். இறந்தவர் கஜாஜி மாகாணத்தைச் சேர்ந்த அப்துல் ரஹ்மான் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது. சம்பவம் கந்தகார் மாகாணத்திலேயே இடம்பெற்றது என்பதால் அதிபரைக் கொல்ல முயன்றவர் தலிபான் அல்லது அல்கெய்டா தீவிரவாதியாக இருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. கந்தகார், தலிபான் மற்றும் அல்கெய்டாவின் கோட்டையாக இருந்த நகரம் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆப்கானில் அமெரிக்கப் படைகள் தமது இராணுவ நடவடிக்கையை நிறுத்தவேண்டும் என்று குரல்கள் எழுப்பப்பட்டுவரும் நிலையில், இந்தச சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது இன்னும் சிறிதுகாலம் அமெரிக்கப் படைகள் தமது நடவடிக்கைகளைத் தொடர வழிவகுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

## செப்ரெம்பர் 11 தாக்குதலை திட்டமிட்டவர் பின்லேடனே

### அல்கெய்டா உறுப்பினர் இருவர் பேட்டி

றியாட்,செப்.10

அமெரிக்க நகரங்கள்மீது கடந்த வருடம் செப்ரெம்பர் 11ஆம் திகதி விமானங்களைக் கடத்தி நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலுக்கான திட்டத்தை ஒஸாமா பின்லேடனே நேரில் தயார்ப்படுத்தினார் என்று அல்கெய்டா அமைப்பைச் சேர்ந்த இருவர் தெரிவித்துள்ளனர்.

கடாரில் இருந்து ஒளிபரப்பாகும் அல்ஜெசீரா தொலைக் காட்சிக்கு வழங்கிய பேட்டியொன்றில் அவர்கள் இதனைத் தெரிவித்துள்ளதாக சவூதி அரேபியச் செய்திகள் தெரிவித்தன.

பேட்டியளித்த இருவரும் அல்கெய்டா அமைப்பின் இராணுவ நடவடிக்கைகளுக்குப் பொறுப்பானவர்கள் என்று கூறப்படுகிறது.

அவர்களது இந்தப் பேட்டியில் ஒஸாமா பின்லேடன் இன்னும் உயிரோடு இருக்கிறாரா இல்லையா என்பது குறித்து தெளிவாக எதுவும் சொல்லப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம)

## மாலைதீவு சென்ற விமானத்தை கடத்த முயன்ற இருவர் கைது!



மாலைதீவுகளில் ஒன்றின் அழகிய கடற்கரையோரம்.

மாலே,செப்.10

இந்தியாவின் மும்பை நகரில் இருந்து மாலைதீவுக்கு சென்றுகொண்டிருந்த விமானத்தைக் கடத்த முயன்ற இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக மாலைதீவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மும்பையில் இருந்து மாலே நோக்கிச் சென்றுகொண்டிருந்த ஏயர் சவேரஷ் நிறுவன விமானத்திலேயே நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தின் பின்னர் கத்திகள் சகிதம் இருவர் விமானிகள் அறைக்குள் நுழைய முயன்றனர் என்றும் -

விமானப் பணியாளர்கள் அவர்களைத் தடுத்து நிறுத்தி மடக்கிப் பிடித்தனர் என்றும் -

அதிகாரிகள் கூறினர்.

விமானம் குறிப்பிட்ட நேரத்தில் மாலைதீவு தலைநகரான மாலே விமான நிலையத்தில் தரையிறங்கியது.

அங்கு வைத்து விமானத்தைக் கடத்த முயன்ற இருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். (ம)

## உலகஅழகிப் போட்டியை ஐரோப்பிய நாடுகள் புறக்கணிப்பு

2002ஆம் ஆண்டுக்கான 'மிஸ் வேர்ல்' அழகிப்போட்டி, நைஜீரியா நாட்டின் தலைநகர் அபுஜாவில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடக்கிறது.

விவாகரத்துச் செய்த நைஜீரியப் பெண் திருமணம் செய்து கொள்ளாமல் இன்னொருவருடன் உறவுகொண்டு குழந்தை பெற்றுக்கொண்டார். இஸ்லாமியச் சட்டப்படி திருமணத்துக்கு வெளியே உறவு கொள்வது குற்றம் ஆகும். அதனால் அந்தப் பெண்ணை கல்லால் அடித்துக்கொல்லும்படி நீதிமன்றம் உத்தரவிட்டது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரான்ஸ், பெல்ஜியம், நோர்வே, ஐவரிகோஸ்ட், கென்யா ஆகிய நாடுகள் அழகிப் போட்டியைப் புறக்கணித்துள்ளன. இன்னும் 12 நாடுகள் இந்தப் போட்டியில் கலந்து கொள்வது குறித்து இன்னும் எந்த முடிவும் எடுக்கவில்லை என்று கூறி உள்ளன. (ம)

## தீவிரவாதிகளின் தாக்குதலில் நேபாளத்தில் 60 பேர் உயிரிழப்பு!

### பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்தவர்கள்



நேற்றைய தாக்குதலை அடுத்து நேபாள நகர் ஒன்றில் படையினர் ரோந்து சுற்றுகின்றனர்.

காத்மண்டு,செப்.10

நேபாளத்தில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் நடத்திய புதிய தாக்குதல்களில் பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்த 60 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

தலைநகர் காத்மண்டுவுக்கு தென்மேற்கே 300 கிலோமீற்றர் தூரத்தில்) உள்ள அர்ஹகான்ஜி மாகாணத்தின் சண்டிஹரா நகரில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. ஞாயிறன்று இரவு தீவிரவாதிகள் திடீரென நகருக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தினர்.

தாக்குதல் நடத்தப்பட்ட சமயம் அந்த நகரத்தில் பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்த 200 பேர் தங்கியிருந்தனர். நேற்று மாலைவரை அந்த மாகாணத்துடனான தொடர்புகள் இல்லாதிருந்தன. உதவிக்காக அனுப்பப்பட்ட ஹெலிகள் கூட அங்கு கடும் சண்டைகள் இடம்பெற்றுக்கொண்டிருந்ததால் தரையிறங்கமுடியாமல் திரும்பின.

நூற்றுக்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் முதலில் கிழக்கு நேபாளில் உள்ள பொலிஸ் நிலையத்தைத் தாக்கினர். இதில் குறைந்தது 50 பொலிஸார் உயிரிழந்தனர். தாக்குதலை அடுத்து அரசு நாடு முழுவதும் பாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ளது.

அந்தப் பகுதிக்கு மேலதிக உதவித் துருப்புக்களை அனுப்புவதற்கு கடும்மழையும், மோசமான போக்குவரத்தும் இடைஞ்சலாக இருப்பதாக அரசுத் தரப்புப் பேச்சாளர் தெரிவித்தார். தீவிரவாதிகள் பலர் கொல்லப்பட்டதாகப் பாதுகாப்புப் படையினர் தெரிவித்தபோதும் அவர்களின் மூன்று சடலங்கள் மட்டுமே படையினரால் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

கடந்த சனிக்கிழமையன்றும் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 40 பொலிஸார் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## காஸாவில் இஸ்ரேல் படை நடவடிக்கை

ஜெருசலேம்,செப்.10

பலஸ்தீன தன்னாட்சி அதிகாரத்துக்கு உட்பட்ட காஸா பகுதிக்குள் இஸ்ரேலிய இராணுவம் நேற்று திடீரெனப் புகுந்து இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டது.

காஸா நகரின் மத்தியில் உள்ள அகதி முகாம்களை நோக்கி இஸ்ரேலிய இராணுவத்தின் டாங்கிகள், புல்டோசர்கள், கவச வாகனங்கள் என்பன முன்னேறிச் சென்றதை அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் நேரில் கண்டுள்ளனர்.

அவர்கள் செல்லும் வழியில் இருந்த பலஸ்தீன ஆயுததாரிகளின் வீடுகள் மற்றும் ஆயுதங்கள் உற்பத்தி செய்யப்படும் இடங்கள் என்று இஸ்ரேல் கூறும் பகுதிகளையும் இஸ்ரேலியப் படைகள் தாக்கி நிர்மூலமாக்கியபடி சென்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இஸ்ரேலின் இந்த நடவடிக்கையால் அப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவுகின்றது.

இது தொடர்பாக ஆராய்வதற்காக பலஸ்தீன நாடாளுமன்ற உறுப்பினர்கள் வழமைக்கு மாறாக விசேட கூட்டத் தொடரை கூட்டுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, காஸா நகரின் தெற்குப் புறத்தில் உள்ள இரு அகதி முகாம்களை நோக்கி இஸ்ரேலின் 40 டாங்கிகள் முன்னேறியுள்ளதாக பலஸ்தீன பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. கடந்த 48 மணிநேரத்தில் இஸ்ரேல் மேற்கொள்ளும் இரண்டாவது பெரிய நடவடிக்கை இதுவாகும் என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த நடவடிக்கையில் அல்-புருஜீ அகதி முகாமில் இருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் காயமடைந்தனர்.

எகிப்திய எல்லையோரத்தில் நடைபெற்ற மற்றொரு சம்பவத்தில் இரு பலஸ்தீனர்கள் இஸ்ரேலிய படையினரின் தாக்குதலில் கொல்லப்பட்டதாக பலஸ்தீன அதிகாரிகள் தெரிவித்தனர். (ம)



இஸ்ரேலியர்களின் தாக்குதல்களில் நிர்மூலமான பலஸ்தீனர்களின் இரும்புக் தொழிற்சாலை.

# கைத்தொழில் கண்காட்சி கிளிநொச்சியில்!

வடக்கு - கிழக்கு மாகாண கைத்தொழில் திணைக்களம் வருடந் தோறும் நடத்திவரும் கைத்தொழில் கண்காட்சி எதிர்வரும் 20 ஆம் திகதி தொடக்கம் 22 ஆம் திகதிவரை கிளிநொச்சி மகாவித்தியாலத்தில் நடைபெறவுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள 8 மாவட்டங்களையும் சேர்ந்த பயிற்சியாளர்களின் கைப்பணிப் பொருள்கள் இந்தக் கண்காட்சியில் காட்சிக்கு வைக்கப்படவுள்ளன.

மேற்படி கண்காட்சிக்கு குடாநாட்டிலிருந்தும் கைத்தொழில் பொருள்கள் எடுத்துச் செல்லப்படவுள்ளதுடன் இதில் பணியாற்றுவதற்கான அலுவலர்களும் இங்கிருந்து செல்லவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

# பற்சிகிச்சை நிலையங்கள் திறந்து வைப்பு

கரவெட்டி,செப்.10

வடமராட்சியில் மாணவர்களுக்கான பற்சிகிச்சை நிலையங்கள் இரு இடங்களில் புதிதாக செயற்படத் தொடங்கியுள்ளன.

உடுப்பிட்டி மகளிர் பாடசாலை, கரவெட்டி அரசினர் மகப்பேறு மத்திய மருந்தகம் ஆகிய இரு இடங்களிலுமே இந்த பற்சிகிச்சைப் பிரிவுகள் ஆரம்பமாகி நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. (எ-70)

# பதிவு செய்யக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,செப்.10

யாழ்மாவட்டத்திலுள்ள அனைத்து மினிசினிமா மற்றும் ஓடியோ சென்ரர் உரிமையாளர்களும் தமது நிறுவனங்களை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் இல.249, பலாலி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள சங்க அலுவலகத்தில் பதிவு செய்து அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்ளுமாறும் -

இதுவரை காலமும் அங்கத்துவம் பெறாத வீடியோ பட விநியோகத்தர்கள் இந்தக்காலப் பகுதிக்குள் தமது பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் - யாழ்மாவட்ட திரைப்பட வழங்குநர் கூட்டுறவுச் சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (எ-ரி)


உ

உடுவில் வடக்கு

ஸ்ரீ சொர்ணசித்தி பஞ்சமுக விநாயகர் தேவஸ்தானம்

## ஆவணி விநாயக சதுர்த்தி உற்சவம்

விநாயக அடியார்களே!

ஆவணி 25ஆம் நாள் இன்று (10-09-2002) செவ்வாய்க் கிழமை விநாயக சதுர்த்தியை முன்னிட்டு விநாயகப் பெருமான் திருவீதியுலா நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

மாலை 3.00 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையாகி திருவூஞ்சல் நடைபெற்று, பூந்தண்டிகையில் எம்பெருமான் புறப்பட்டு உடுவில் டச்சு வீதியூடாகச் சென்று கற்பகக்குணை அம்பலவாணர் வீதிவழியாக ஆலயத்தை வந்தடைவார்.

இரவு 7.00 மணிக்கு பிராயச்சித்த அபிஷேகமும் ஸ்நபன அபிஷேகமும் பஞ்சமுகார்ச்சனையும் நடைபெறும்.

அடியார்கள் வந்து தரிசித்து இஷ்ட சித்திகளைப் பெறும் வண்ணம் வேண்டுகின்றோம்.

(8088) - தேவஸ்தானத்தினர்



## முதலாவது பிறந்ததின வாழ்த்து

HAPPY BIRTHDAY



செல்வி மதுஜா

MATHUJA

பிரான்ஸில் வசித்துவரும்

திரு.திருமதி நாகேஸ்வரன் - கருணா

தம்பதிகளின் செல்வப் புதல்வி

செல்வி மதுஜா

அவர்கள் இன்று(10.09.2002) செவ்வாய்க்கிழமை வரும் தனது பிறந்த தினத்தை எதிர்வரும் 22.09.2002 ஞாயிற்றுக்கிழமையன்று பிரான்ஸில் வெகு விமரிசையாகக் கொண்டாடவிருக்கின்றார்.

செல்வி மதுஜாவை அன்பு அப்பா, அம்மா, தாத்தா, அம்மம்மா, அப்பப்பாமார், அம்மம்மாமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், அத்தைமார், சித்தப்பாமார், சித்திமார், அண்ணாமார், அக்காமார், தம்பிமார், தங்கைமார், மச்சாள்மார், மச்சான்மார் ஆகியோர் சகல செல்வங்களும் பெற்று நீடூழி வாழ வேண்டுமென்று எல்லாம்வல்ல உரும்பிராய் பர்வதபத்தினி அம்மன் அருளை வேண்டுவதுடன் பல்லாண்டு காலம் சுகமே வாழ்கவெனவும் மனமார வாழ்த்துகின்றார்கள்.

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

தகவல்:
சி.சுப்பிரமணியம்
(தாத்தா)

(8095)



ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சித்திரபானு வருடம் ஆவணி மாதம் 26ஆம் நாள்(11.09.2002) புதன்கிழமை முற்பகல் 10.00 மணி முதல் 11.30 மணிவரையுள்ள விருச்சிக லக்கின சுபவேளையில்

எமது கனிஷ்ட புதல்வன்
இராசபாலு
(ஜெயலஷ்மி ஜுவல்லரி அன் கட்டிங், சாவகச்சேரி)
அவர்களுக்கும்

எமது தவப் புதல்வி
தவலோஜினி
அவர்களுக்கும்

இறைவன் திருவருள்துணைகொண்டு சங்கத்தானை ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயத்தில் திருமணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(அன்று மாலை 4.00 மணிக்கு மணமகன் இல்லத்தில் வரவேற்புபசாரம் நடைபெறும்) இடம்பெயர்ந்திருக்கும் மணமகனின் உறவினர்கள், நண்பர்கள் இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

திருமதி ஆறுமுகம் மகேஸ்வரி
இத்தியடிபிள்ளையார் கோயிலடி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

(இருவீட்டார் அழைப்பு)

திரு.திருமதி க.அருணாசலம்
சங்கத்தானை,
சாவகச்சேரி.

(8042)





உ

சுவாமியே சரணம் ஐயப்பா!

கோண்டாவில் கிழக்கு

அருள்மிகு ஸ்ரீ சபரீஸ ஐயப்ப சுவாமி தேவஸ்தானம்

நூதன பிரதிஷ்டா பஞ்சகுண்ட பக்ஷ மகாயாக

## மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

ஐயப்பன் அடியார்களே!

நிகழும் மங்களகரமான சித்திரபானு வருஷம் ஆவணித்திங்கள் 26ஆம் நாள் நாளை (11.09.2002) புதன்கிழமை காலை 6.30 மணிமுதல் 7.31 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில் ஸ்ரீ ஐயப்பனுக்கும் பரிவாரமூர்த்திகளுக்கும் மஹாகும்பாபிஷேகம் நடைபெற ஐயப்பன் திருவருள் கைகூடியுள்ளது.

### கிரியை விவரம்

10. 09. 2002. இன்று செவ்வாய்க்கிழமை காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரையும் பக்தர்கள் எண்ணெய்க்காப்புச் சாத்துதல்.

11. 09. 2002 நாளை புதன்கிழமை காலை 6.30மணி - குரு அபிஷேகம்.
காலை 7.00மணி - கும்பாபிஷேகம்.
மாலை 6.00 மணி - சுவாமி வீதியுலா.

பிரதிஷ்டா பிரதமகுரு: பிரம்மஸ்ரீ தானு. வாசுதேவக்குருக்கள்.

ஆலய அர்ச்சகரும் அறங்காவலரும் } குருசுவாமி கி.அரிகரசுதசர்மா

இரவு விசேட நிகழ்ச்சியாக,

இந்திய பிரபல பக்திப் பாடகர் சத்திசாசன் அவர்களின் இசைவிருந்து!

ஐயப்பன் அடியார்கள் அனைவரும் வருக!!!

ஐயப்பன் திருவருளை அனுதினமும் பெறுக!!!

- இவ்வண்ணம் -

ஐயப்பன் ஆலய நிர்வாகசபை,
சபரீஸ சேவா சங்கம்.

கோண்டாவில். (C/23730)



யாழ்ப்பாணக் கல்லூரியின்

## மகாகவி பாரதி விழா



இடம்: யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு
464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

காலம்: நாளை (11-09-2002) புதன்கிழமை
பிற்பகல் 3.00 மணி

தலைமை: தமிழ்மன்றம், யாழ்ப்பாணக் கல்லூரி

பிரதம விருந்தினர்: உயர்திரு. அருண்மொழி அவர்கள்
(பிரபல தமிழ் சினிமாப்பட இயக்குநர், தமிழ்நாடு)

### நிகழ்ச்சிகள்

- மங்கள விளக்கேற்றல்
- தமிழ்த்தாய் வணக்கம்
- வரவேற்புரை:- நோயல் - அ.விமலேந்திரன்
  பதில் அதிபர், யாழ்ப்பாணக்கல்லூரி
- ஆசியுரை அதிவண. பேராயர் கலாநிதி சு.ஜெபநேசன்
- சிறுவர் நாடகம்
- பிரதம விருந்தினர் உரை
  'பரந்துபட்ட பார்வையில் பாரதி'
- நடனம்
- பாரதி சிறப்புப் பட்டிமன்றம்

### மகாகவி பாரதியின் தனிப்பெரும் புகழுக்கு பெரிதும் துணை நிற்பது

❊ தேசிய உணர்வா? ❊ இறையுணர்வா? ❊ சீர்திருத்த உணர்வா?

நடுவர் அ.குமாரவேல்
(விரிவுரையாளர் - யாழ்ப்பாணக் கல்லூரி)

| தேசிய உணர்வு | இறையுணர்வு | சீர்திருத்த உணர்வு |
|---|---|---|
| திரு.வி.சிவஞானபோதன் (அதிபர், வட்டு. மத்திய கல்லூரி) | திரு.பொ.அருந்தவநாதன் (விரிவுரையாளர் - யாழ்ப்பாணக்கல்லூரி) | திரு.இரா.செல்வவடிவேல் (பிரபல விஞ்ஞான ஆசிரியர்) |
| செல்வன் கனக. சுகாஸ் (மாணவன் யாழ்ப்பாணக் கல்லூரி) | திரு.ந.குகபரன் (மாணவன், யாழ்.பல்கலைக்கழகம்) | திரு.பி.எஸ்.கேசவன் (ஆசிரியர், வட்டு. மத்திய கல்லூரி) |

- நன்றியுரை

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

தமிழ் மன்றம்,
யாழ்ப்பாணக் கல்லூரி

(C/23750)

உதயன்

## பொறுப்போடு செயற்படுக!

நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் தற்போதைய சமாதான முயற்சிகளில் முஸ்லிம் சமூகத்தவர்களுக்குரிய ஸ்தானமும் அங்கீகாரமும் வழங்கப்பட்டிருப்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் சமரச முயற்சிகள் இரண்டு தரப்பாக மட்டுமே கையாளப்பட்டு வந்தன.

ஒரு தரப்பில் தமிழர்கள்; மறுதரப்பில் இலங்கை அரசு.

எண்பதுகளின் மத்தியில் திம்புவில் தொடங்கி அண்மைக்காலம் வரை இதுதான் நிலைமை.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண இந்தியத் தரப்பின் தலையீட்டில் எண்பதுகளின் பிற்பகுதியில் தீர்வு யோசனை ஒன்று முன்வைக்கப்பட்டது. அந்த யோசனையை நடைமுறைப்படுத்துவதற்காக இலங்கை - இந்திய ஒப்பந்தம்கூடக் கைச்சாத்தானது.

எனினும், இந்தத் தீர்வு யோசனைக்கு வடிவம் கொடுப்பதற்கு முன்னர் ஒரு பேச்சுக்குக் கூட முஸ்லிம்களின் கருத்து கவனத்தில் கொள்ளப்படவில்லை; கணக்கில் எடுக்கப்படவில்லை.

முஸ்லிம்களும் தமிழ் பேசும் மக்களே. அதனால் தமிழர் என்ற இனக் குழுமத்துக்குள் அவர்களும் அடங்குகின்றார்கள் என்று கருதப்பட்டு வந்தது. ஆனால், அவர்கள் மொழியால் ஓரினமானாலும் வாழும் முறையாலும், கலாசாரம், பண்பாடுகள், மதம் போன்றவற்றாலும் தனித்து நிற்கின்றார்கள். அவர்களது வாழ்க்கை நெறிக்கு ஒருதனித்துவமும், தனி அடையாளமும் உண்டு. அந்த வகையில் அவர்கள் தங்களை ஓர் இனக் குழுமமாகக் கருதவேண்டும் என்று உரிமை கோருவதை யாரும் இலகுவில் புறந்தள்ளிவிட முடியாது.

இந்த அடிப்படையில்தான் அவர்களின் இனத்துவத்தனித்தன்மையை புலிகளின் தலைவர் பிரபாகரன் அங்கீகரித்தார்.

சமரச முயற்சிகளில் இதுவரை இரண்டு தரப்புக்களாக ஈடுபட்டு வந்த அரசும், தமிழர் தரப்பாகிய புலிகளும் மூன்றாவது தரப்பாக முஸ்லிம்களை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

அதனால், தற்போதைய சமாதான முயற்சிகள் இரண்டு தரப்புகளிலிருந்து மூன்று தரப்புக்களுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

பேச்சுக்குத்தான் ஒரு தரப்பாகக் கூப்பிட்டிருக்கின்றார்களேயொழிய, அதற்கு முந்திய புரிந்துணர்வு உடன்பாட்டிற்கு முஸ்லிம்களை அழைக்கவில்லையே என்று சில முஸ்லிம் தலைவர்கள் குறை கூறி வருகின்றார்கள்.

இனப்பூசலையும் போரையும் முடிவுக்குக் கொண்டு வந்து சமாதான முயற்சிகளுக்கான நல்லெண்ணப் புறச்சூழலை ஏற்படுத்தவே புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டது.

இனப்பூசலில் - நேரடியாகச் சமரில் ஈடுபட்டிருந்தவர்கள் - அரசுப் படைகளும் புலிகளும்தான். அவர்களுக்கிடையிலான யுத்தத்தைத்தான் நிறுத்த வேண்டியிருந்தது.

அந்த யுத்த காலத்தில் முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் என்று தங்களைக் கூறிக்கொண்டவர்களில் பலர் பெரும்பான்மை மக்களின் கட்சிகளில் ஏதோ ஒன்றின் பக்கம் சார்ந்துதான் நின்றனர். ஒன்றில் ஆளும் கட்சிப் பக்கம் அல்லது எதிர்க்கட்சிப் பக்கம். புலிகள் போன்று தனித்துவப் போராட்ட சக்தியாக அவர்கள் இருக்கவில்லை.

ஆகவே, மோதலை நிறுத்தும் நோக்கத்தைப் பிரதானமாகக் கொண்ட யுத்தநிறுத்த உடன்பாட்டில் முஸ்லிம்களை ஒரு தரப்பாகச் சேர்க்கவேண்டிய தேவை ஏற்படவில்லை. அவர்கள் 'சார்ந்து நின்ற அரசுத் தரப்பும் புலிகளுமே அதைச் செய்துகொண்டார்கள்.

என்றாலும், கிழக்கில் முஸ்லிம்களுக்கும் தமிழர் தரப்புக்கும் இடையில் நல்லிணக்கத்தையும் பரஸ்பர ஒத்துழைப்பையும் உறுதி செய்வதற்காக - தூர நோக்கோடு - புரிந்துணர்வு உடன்படிக்கையைத் தொடர்ந்து முஸ்லிம் தலைமைத்துவத்துடன் ஒரு நட்புறவு உடன்பாட்டைச் செய்துகொண்டார் தலைவர் பிரபாகரன்.'

அதன் பின்னர் சில தீயசக்திகளின் தூண்டுதலால் இரு சமூகங்களுக்குமிடையே சில அசம்பாவிதங்கள் நிகழ்ந்துள்ள போதிலும், நட்புறவு உடன்படிக்கை பயனளிக்கத் தொடங்கியிருக்கிறது.

சமாதான முயற்சிகளுக்கான நல்லதோர் சூழலும் பரிணமித்திருக்கின்றது.

இந்தச் சந்தர்ப்பத்தைப் போட்டு உடைக்காமல், சமரச முயற்சிகளைக் குழம்பிப்போகவிடாமல் தீர்வுக்கான நடவடிக்கைகளை வெற்றிபெற வைப்பதற்கு இரு சமூகங்களின் தலைமைகளும் ஒத்திசைவாகவும் பொறுப்புணர்வுடனும் நடந்துகொள்ளும் என்று நம்புகின்றோம்.

### ஹாட்லி, மெதடிஸ் பிரச்சினையில்

# அரசும் மாணவரும் பெற்றோரும் சேர்ந்தே தீர்வுகாண வேண்டும்!

## கண்காணிப்புக்குழு பிரதிநிதி தெரிவிப்பு

கரவெட்டி,செப்.10

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மற்றும் மெதடிஸ் பெண்கள் பாடசாலை ஆகியவற்றுக்குச் செல்லும் வழியில் உள்ள இராணுவ நிலைகளை அகற்றுவது குறித்த பிரச்சினைக்கு அப்பாடசாலைகளின் மாணவர்கள் அவர்களது பெற்றோர் ஆகியோருடன் அரசும் சேர்ந்து பேசியே தீர்வுகாண வேண்டும்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் வடமராட்சி அலுவலகப் பிரதிநிதி எரிக்கோல் இவ்வாறு தெரிவித்தார்.

மேற்படி இரு பாடசாலைகளும் நேற்று மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட போது, படையினரின் முன்னரங்க நிலை ஊடாக மாணவர் மற்றும் ஆசிரியர் செல்வது தொடர்பான கண்காணிப்புப் பணியில் எரிக்போல் ஈடுபட்டிருந்தார்.

ஹாட்லிக் கல்லூரி அதிபர் எம்.ஸ்ரீபதியும் அவருடன் நின்றிருந்தார்.

அப்போது 'உதயன்' செய்தியாளர் கேட்ட கேள்விகளுக்கு எரிக்போல் பதிலளித்தார்.

அவரிடம் கேட்கப்பட்ட கேள்விகளும் அவரளித்த பதில்களும் வருமாறு:-

? பாடசாலைகளில் மாணவர்களின் வரவு மிகக் குறைவாக உள்ளது என்பதை அவதானித்தீர்களா?

! ஆம்! அண்மையில் இங்கு நடந்த சம்பவங்கள் இதற்குக் காரணமாக இருக்கலாம்.

? ஆயுத முறையில் மாணவர்கள் கல்வி கற்க முடியுமென நீங்கள் கருதுகின்றீர்களா?

! நிச்சயமாக கல்வி கற்க முடியாது.

? ஆயுதமுனையில் மாணவர்கள் கல்வி கற்கமுடியுமென நீங்கள் கருதுகின்றீர்களா?

! நிச்சயமாகக் கல்வி கற்க முடியாது.

? எமது மாணவர்களுக்கு உங்களால் எப்படிப் பாதுகாப்புக் கொடுக்க முடியும்?

! பாடசாலைகள் ஆரம்பிக்கும் நேரமும் பாடசாலை முடிவடையும் நேரமும் கட்டாயம் நாம் இங்கு கண்காணிப்பில் ஈடுபடுவோம். இடைஇடையேயும் பருத்தித்துறை எல்லைக்குள் நடமாடிய வண்ணமாகவே இருப்போம்.

? இக்கண்காணிப்பைக் கூட நீங்கள் எத்தனை கிழமைகளுக்கு அல்லது எத்தனை மாதங்களுக்கு அல்லது வருடங்களுக்கு வழங்க முடியும் என்று எதிர்பார்க்கிறீர்கள்?

! சர்வதேசக் கண்காணிப்புக்குழு இங்கு செயற்படும் காலம் வரை கொடுக்கலாம் என்று எமது தலைமையகம் தெரிவித்துள்ளது.

? பாடசாலை நேரமான காலை 8.30 மணி முதல் பிற்பகல் 2.30 மணி வரையிலாவது இராணுவத்தினர் அவர்களது பாதுகாப்பு நிலையை விட்டு சற்று விலகியிருக்க முடியாதா?

! நாம் புரிந்துணர்வுடன் இந்தயோசனையைத் தெரிவித்துப் பார்க்கலாம். படையினர் அதற்கு முடியாது என்று சொல்லிவிட்டால் எம்மால் ஒன்றும் செய்ய முடியாது.

? கடந்த காலத்தில் இதுபோன்ற இராணுவ நிலைகளில் பொதுமக்களுக்கும் மாணவர்களுக்கும் நேர்ந்த கதிகளை எமது மக்கள் மறந்திருக்க மாட்டார்கள். மாணவர்கள் பெரும் அச்சமடைவதற்கு அதுதான் காரணம். இதற்கு நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?

! ஆனால், இனிமேல் இந்தப் பாடசாலைகளின் நுழைவாயிலின் இராணுவ முன் அரங்கில் இராணுவத்தினர் பெயரளவில்தான் இருப்பர் பொலீஸாரே அங்கு அதிகளவில் கடமையாற்றுவார்கள்.

? அவர்களில் யார் இருந்தாலும் மாணவருக்கு இது ஒரு பிரச்சினையாகவே கருதப்படுகிறது. இதைத் தீர்க்க வழி என்ன?

! பெற்றோர்களும், அரசும், மாணவர்களும் சேர்ந்தே இதற்கு ஒருமுடிவு காணவேண்டும் - என்றார் அவர்.

கல்லூரி அதிபர் ஸ்ரீபதியிடம் மாணவர் பாதுகாப்பு மற்றும் அவர்களின் போக்குவரத்துப் பற்றிக் கேட்டபோது மாணவர்கள், ஆசிரியர்கள் எவ்வித சோதனையும் இன்றி இனிப் பாடசாலை சென்று வரலாம். ஏனையோர் செல்லுவதானால் சோதனைக்குட்படுத்தப்பட்டே அனுமதிக்கப்படுவர் என்று தெரிவித்தார். (ஓ-70)

## விடுதலைப் புலிகளின் அன்பளிப்பு

முல்லைத்தீவு,செப்.10

புதுக்குடியிருப்பில் இயங்கிவரும் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அம்புலன்ஸ் வாகனம் ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பெருந்தொகையான நோயாளிகள் சிகிச்சை பெறும் இந்த மருத்துவமனையில் அம்புலன்ஸ் வாகனவசதி போதியளவு இல்லாமையினாலேயே இந்த உதவி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (ஓ-12)

## புலிகளுடன் சேரவந்த மாணவர் மீண்டும் தந்தையிடம் ஒப்படைப்பு

தமது இயக்கத்தில் சேர்வதற்காக வந்த 14 வயது மாணவர் ஒருவரை அவரது வயதைக் கருத்திற்கொண்டும், தமது இயக்கக் கட்டுப்பாடு காரணமாகவும் தமிழீழ விடுதலைப் புலிகளின் வடமராட்சி அரசியற்றுறைப் பொறுப்பாளர், மாணவரின் பெற்றோரிடமே மீண்டும் ஒப்படைத்தார்.

உடுப்பிட்டி, மல்லாமலை என்ற இடத்தைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி பிரதீபன் (வயது 14) என்ற அந்த மாணவன் கடந்த சனிக்கிழமை காலை 10.30 மணியளவில் விடுதலைப் புலிகளின் பணிமனைக்குச் சென்றிருந்தார். அங்கு இயக்கத்தில் இணைந்துகொள்ள அவர் விருப்பந்தெரிவித்தார். ஆனால், அவரது வயதின் காரணமாக இயக்கத்தில் இணைத்துக்கொள்ள முடியாதுள்ளதாக பணிமனையினர் தெரிவித்தனர். ஆனால், அந்த மாணவன் இதனை ஏற்காது வீடு செல்லமறுத்தார்.

இதனையடுத்து அவரது தந்தையான எஸ்.கிருஷ்ணமூர்த்தியை வரவழைத்த புலிகளின் வடமராட்சி அரசியற் பிரிவுப் பொறுப்பாளர், மாணவரை அவரது தந்தையிடம் ஒப்படைத்தார். (ஓ-70)

## நாணய நிதிக்குழு இலங்கைக்கு விஜயம்

கொழும்பு,செப்.10

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் அடுத்தவாரம் இலங்கைக்கு வரவுள்ளதாகக் கூறப்படுகிறது.

இலங்கையில் நிலவும் தற்போதைய நிலைமைகள் குறித்தும் -

இலங்கைக்கு பொருளாதார உதவிகள் வழங்குவது குறித்தும் - ஆராயவே இக்குழு இங்கு வரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த வரவு, செலவுத் திட்டத்தில் ஏற்படுமென எதிர்பார்க்கப்படும் நிதிப் பற்றாக்குறையை ஈடுசெய்வதற்கு சர்வதேச நாணய நிதியம் உதவவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-12)

### நாளை

ஆவணி 26
புதன்கிழமை
(11.09.2002)
திதி : பஞ்சமி
முன் இரவு 9.46 வரை
நட்சத்திரம் : சுவாதி
பிற்பகல் 2.15 வரை
ரிஷி பஞ்சமிநாள்
சுபநேரம் : 4.33 - 6.03
ராகுகாலம்: 12.03 - 1.33
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

தேவையும், சந்தர்ப்பமுமே கோழையையும் வீரானாக்குகின்றன.

## சுயதொழில் முயற்சி குறித்து பெண்களுக்கு பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம்,செப்.10

கணவனால் கைவிடப்பட்ட நிலையில் வாழ்ந்து வருகின்ற, வருமானம் குறைந்த பெண்களுக்கான சுயதொழில் முயற்சி தொடர்பான பயிற்சிப்பட்டறை ஒன்று எதிர்வரும் 14ஆம், 15 ஆம் திகதிகளில் யாழ்.செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

14 பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்தும் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட 200 பெண்கள் இப்பயிற்சிப் பட்டறையில் கலந்துகொள்ளவுள்ளனர். சம்பந்தப்பட்ட 200 பேரையும் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட தினத்தில் பயிற்சியில் கலந்துகொள்ளுமாறு யாழ். சமுர்த்தி அபிவிருத்தி உதவி ஆணையாளர் என்.சிவபாதசுந்தரம் கேட்டுள்ளார்.

நெடுந்தீவு, வேலணை, ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் மற்றும் உடுவில் பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த பெண்களுக்கான பயிற்சி எதிர்வரும் 14ஆம் திகதியும் -

சாவகச்சேரி, பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி, சண்டிலிப்பாய், சங்கானை மற்றும் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த பெண்களுக்கான பயிற்சி எதிர்வரும் 15 ஆம் திகதியும் - நடைபெறவுள்ளன.

மேற்படி பயிற்சிப் பட்டறையை நடத்துவதற்கென கொழும்பில் இருந்து சமுர்த்தி அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர்கள் யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர் என்றும் - உதவி ஆணையாளர் தெரிவித்தார். (எ-10)

## பேச்சுக்கான ஏற்பாடுகள் தாய்லாந்தில் மும்முரம்

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே தாய்லாந்தில் நடைபெறவிருக்கும் பேச்சுக்கான ஏற்பாடுகளை அந்நாட்டு அரசு மும்முரமாக மேற்கொண்டு வருகிறது.

பேச்சுக்கான ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காக மூன்று குழுக்களை தாய்லாந்து அரசு அமைத்துள்ளது.

பேச்சில் கலந்துகொள்ளும் பிரதிநிதிகளின் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து ஆகிய விடயங்களை இந்த மூன்று உயர் மட்டக் குழுக்களும் கவனிக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குழுவில் அந்நாட்டின் பொலீஸார், உளவுத்துறையினர், இராணுவத்தினர் மற்றும் உயர் அதிகாரிகள் அடங்கியுள்ளனர். இதேவேளை, தாய்லாந்தில் இடம்பெறவிருக்கும் பேச்சுக்குரிய ஒழுங்குகள் பற்றிய விடயங்களை அறிவிக்கவும், தாய்லாந்தில் பேச்சு இடம்பெறவுள்ள இடத்தினைப் பார்வையிடவும் நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் அங்கு சென்றுள்ளனர். (ஓ-12-9)

## வன்னியில் கேணல் ராஜுவுக்கு எழுச்சியுடன் மக்கள் அஞ்சலி

கொழும்பு,செப்.10

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த கேணல் ராஜுவின் மறைவுக்கு வன்னிப் பிரதேசத்தில் எழுச்சியுடன் அஞ்சலி செலுத்தப்பட்டது.

வன்னியில் கேணல் ராஜுவின் 'வித்துடல் பேழை' வைக்கப்பட்டு வீரவணக்கக் கூட்டங்கள் இடம்பெற்றன.

கற்சிலை மடு, ஒட்டுசுட்டான், முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு முதலான பகுதிகளில் கடந்த சனிக்கிழமை முதல் வீரவணக்கக் கூட்டங்கள் இடம்பெற்றன.

புதுக்குடியிருப்பில் இடம்பெற்ற நினைவுக் கூட்டத்தில் கேணல் சொர்ணம், காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், கேணல் பால்ராஜ், தமிழீழ நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா, தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம் ஆகியோர் வீரவணக்க உரைகளை நிகழ்த்தினர்.

நேற்றுமுன்தினம் கேணல் ராஜுவின் வித்துடல் பேழை கிளிநொச்சி மாவட்டத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டுப் பல பகுதிகளிலும் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

வட்டக்கச்சி மாவீரர் மண்டபத்தில் இடம்பெற்ற நினைவுக் கூட்டத்தில் வீரவணக்க உரையினை கேணல் பானு நிகழ்த்தினார்.

பல்லாயிரக் கணக்கான மக்களும், போராளிகளும் இந்த நினைவஞ்சலிக் கூட்டங்களில் கலந்துகொண்டு கேணல் ராஜுவுக்கு தமது வீரவணக்கத்தினைத் தெரிவித்தனர். (ஓ-12)

# புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி
# நிறுவுநர் நினைவு சிறப்பு மலர்
## 10-09-2002

## கல்விப் பணிப்பாளரின் செய்தி

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியின் நிறுவுநர் தின நாளில் வெளிவருகின்ற சிறப்பு மலருக்காக வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

காலாகாலமாக வெளிவருகின்ற இம்மலர், நிறுவுநரின் எண்ணங்களை வெளிக்கொணர்கின்ற செயற்பாடுகள் தொடர்பான ஏடாக வெளிவருகின்றமை பாராட்டத்தக்கதாகும்.

புத்தூர் பிரதேச மக்களின் அபிவிருத்திக்காகத் தன்னை அர்ப்பணித்த நிறுவுநரின் வழியில் கல்லூரியும் செயற்பட்டு, கல்வியும, உண்டியும் வழங்கி தன்பணி குறைவுறாது தொடரவேண்டுமென மனதார வாழ்த்துகின்றேன்.

திருமதி செ.மகாலிங்கம்
வலயக் கல்விப்பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

## மழவராயர் மாண்பு

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஈற்றிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கப்பகுதியிலும் ஈழத்தமிழர் கல்விமுறையில் கணிசமான மாற்றங்கள் பல எழலாயின. திண்ணைப் பள்ளிக்கூடமுறைமை கைவிடப்பட்டு, பல வகுப்புக்களையும் பல ஆசிரியர்களையும் கொண்ட புதுவகை பாடசாலைகள் தோன்றின.

எனினும், அந்தப் பாடசாலைகளில், வேற்றுமதக் கல்வியின் மேலாட்சியே பெரிதும் இடம்பெறலாயிற்று. அத்தகைய சூழலில், நந்தமிழ் மக்கள் தாம் சார்ந்த மொழி, பண்பாடு, நாகரிகம் என்பவற்றுக்கு ஊறு விளையாத, புதியவகை கல்வியினைப் பெறல் வேண்டும் என்ற வேட்கை பூண்டவர்களாய் விளங்கினர். அந்த விதமான நோக்கத்தினை தம் பூட்கையாக்கித் தொண்டாற்றிய பெரியோர்களில் ஆறுமுகநாவலர், சேர்பொன்.இராமநாதன், பாவலர் தெ.துரையப்பாபிள்ளை முதலானவர்கள் புகழ்வாய்ந்தவர்கள். அவர்களின் வரிசையிலே வந்து தோன்றிய ஒரு பெரியவர்தான், புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரியினை நிறுவிய மழவராயர் கந்தையா அவர்கள்.

ஈழத்தமிழரின் தேசிய விழிப்புக்கும் கல்வி மேம்பாட்டுக்கும் உறுதுணையாய் உதவிய அந்தப் பெருமகனார் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராய் விளங்கிய ஒருவர்.

"இன்னறுங்கனிச் சோலைகள் செய்தல்/இனிய நீர்த்தண் கனைகள் அமைத்தல்/அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்/ஆலயம் பதினாயிரம் நாட்டல்...." முதலானவை புண்ணிய தருமங்கள் என்று போற்றப்படுவன. அவை எல்லாவற்றையும் விட, திக்கற்றவர்கள் சீரிய கல்விபெற உதவுதல் பன்மடங்கு சிறந்த புண்ணியம் என்று பாடினார் பாரதியார். அந்த உயரிய சிந்தனையை உச்சிமேற்கொண்டு, போற்றிய மழவராயர் பணிகள் மகத்தானவை. அத்தகைய பெரும் தொண்டாகிய அந்த உயரிய பண்பாளரை அவர் நிறுவிய புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரியின் மாணவர்களும், பெற்றோரும், ஆசிரியர்களும், புதுவையூர் மக்களும் நினைவுகூர்ந்து, பாராட்டி இன்று விழா எடுக்கிறார்கள். அப்பெருமகனாரின் மாட்சிமையும், புகழும் நீடு சிறந்து ஓங்கட்டுமென நாம அனைவரும் நெஞ்சம் நிறைந்து நினைந்துருகிப் போற்றுவோமாக.

கவிஞர், கலாநிதி இ.முருகையன்

## மாணவர்களின் வாழ்த்து

மரபுவழி செழுமைசேர்க்கும் தங்கமென ஒளிருமொரு தனித்துவ வரலாற்றுப் பெருமை பொருந்திய எமது கல்லூரித் தாபகர் அவர்களின் நினைவுநாளும், பரிசளிப்புவிழாவும கொண்டாடப்படும் இன்றைய நன்நாளில், அவரது புகழ்பரப்பிநிற்கும் மாணவப் பரம்பரையில் உதித்த 2002-2003 கல்வியாண்டினைத் தொடரவிருக்கும் பல்கலைக்கழக மாணவர்களாகிய நாங்கள் காலத்தால் அழியாத கேடில் விழுச் செல்வத்தைப் பெறுவதற்கு உதவியாகவிருந்த தாபகர் அவர்களின் நற்பணிகளை நினைவுகூர்ந்து வாழ்த்துவதோடு எம்மைப் பல வழிகளிலும் உயர்வடையச்செய்த அதிபர், உப அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரையும் மனதார வாழ்த்துகின்றோம்.

மேலும் எமது கல்லூரியானது அறிவை வளர்க்கும் கல்விச் சோலையாக மிளிர்ந்து, நறுமணம் கமழவேண்டுமெனப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
செ.சுபத்திரா,செ.வசீகரன்,
ச.கலைமகள், த.நந்தினி, த.கௌசிகா.



## பிரதம சிவாச்சாரியாரின் ஆசியுரை

சைவமும் தமிழும் இரு கண்கள் என்பதே தாரக மந்திரமாகக் கொண்டு தன் ஆவி, அறம், பொருள் அனைத்தையும் அர்ப்பணித்த மகானின் நினைவு நாளும், பரிசளிப்பு விழாவும் நடைபெறும் இந்நாளில் கல்லூரியின் புகழ் மேன்மேலும் பரவி, நிறுவுநர் நாமம் பார் புகழவேண்டுமென எல்லாம் வல்ல விசாலாட்சி சமேத விஸ்வநாதப் பெருமானை வேண்டி ஆசி கூறிப் பிரார்த்திக்கின்றேன்.

சாமி சோமசுந்தரக் குருக்கள்
பிரதம சிவாச்சாரியார்,
அருள்மிகு ஸ்ரீ விசாலாட்சி சமேத
விஸ்வநாத சுவாமி தேவஸ்தானம், புத்தூர்.

உ

### யா/ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி
### நிறுவியவர் நினைவுதினமும் பரிசளிப்பு விழாவும்

காலம்: இன்று (10.09.2002) செவ்வாய்க்கிழமை பி.ப. 1.00 மணி.
தலைவர்: திரு.வ.ஆறுமுகம் (அதிபர்) அவர்கள்
ஆசியுரை: சிவஸ்ரீ சாமி சோமசுந்தரக் குருக்கள்

பிரதம விருந்தினர்
கௌரவ வீ.ஆனந்தசங்கரி (பா.உ.)
(கல்லூரியின் பழைய மாணவர்)

சிறப்பு விருந்தினர்கள்
திரு.இ.சிவஞானசுந்தரம்
(உ.க.ப.,கோப்பாய்ப் பிரிவு)
திரு.த.கவீந்திரதாஸ்
(பொதுமுகாமையாளர், வலி.கிழக்கு (வ.ப.) ப.நோ.கூ.ச.)

நினைவுப் பேருரை
பிரம்மஸ்ரீ ப.சிவானந்தசர்மா B.A.(Hons)
(கோப்பாய் சிவம்)

பரிசில் வழங்கல்
பிரதம விருந்தினர் அவர்கள்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

புத்தூர்.

அதிபர், ஆசிரியர், மாணவர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

## வள்ளலாரின் நற்பணி

யாழ்.ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரியின் நிறுவுநர் நினைவுநாளும் பரிசளிப்புவிழாவும் நடைபெறும் 10.09.2002 இன்று வெளிவர இருக்கும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

வள்ளலார் மழவராயர் கந்தையா என்றால் அனைவரும் புத்தூர் கிராமத்தையே நினைவிற்கொள்வர். அவர் சிறுப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தமது ஆற்றலாலும், செயலாலும் தமிழுக்கும், சமயத்திற்கும் தொண்டாற்றிய உலகறிந்த பெரியார்கள் வரிசையில் வள்ளலாரும், ராவ்பகதூர் சி.வை.தாமோதரம்பிள்ளையும் சிறப்புப் பெற்ற பெரியார்களாக விளங்கினார்கள். வள்ளலார் அவர்கள் புத்தூரைப் புகலிடமாகவும், வதிவிடமாகவும் கொண்டு விளங்கினார்.

அவர்தம் சைவத் தமிழ்ப்பற்றின் வெளிப்பாடாக புத்தூர் விசாலாட்சி சமேத விஸ்வநாதசுவாமி ஆலயமும், மக்களின் அறிவுப்பசி தீர்க்க சோமஸ்கந்த வித்தியாலயமும் மதிசூடும் அரன் அடியார் தமை அமுது செய்விக்க ஓர் அன்னசத்திரமும் அமைத்து அவற்றுக்குத் தமது சொத்து முழுவதையும் அறக்கட்டளையாக விட்டுச்சென்றமை விளங்குகின்றது.

இன்று புத்தூர் சிவன்தேவஸ்தானமும் சோமஸ்கந்த கல்லூரியும் வளர்ந்து சிறந்து விளங்குவதோடு புகழ்பரப்பியும் நிற்கின்றன. வள்ளலாரின் மூன்றாம் பணியாகிய அன்னதானப்பணி தற்கால சூழல் காரணமாக அதன் வளர்ச்சி சிறிது மந்த கதியாக இருப்பதால் அதன் வளர்ச்சிக்கும் நாம் இணைந்து துணைபோவதே அன்னாருக்குச் செய்யும் கைம்மாறாகும் என்று கூறி வள்ளலாரின் பணிகளை நினைவுகூர்ந்து சோமஸ்கந்த கல்லூரியின் புகழ் மேன்மேலும் வளர்ந்தோங்க வாழ்த்துகின்றேன்.

தி.செந்திநாதன்
(பழைய மாணவர்)
வங்கியாளர், இலங்கை வங்கி,
மானிப்பாய்.

## ஸ்தாபகர் அவர்களின் நற்பணிகள்

நலிவடைந்த மக்களின் மேன்மைக்காகவும், ஆன்ம ஈடேற்றத்திற்காகவும் "கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேணடாம்" என்ற வாக்குக்கு அமைவாக புத்தூர் கிராமத்தில் சிவன் ஆலயத்தையும் -

"கல்வி அழகே அழகு" என்பதற்கேற்ப, அறிவுப் பசியை நீக்குவதற்கு சோமஸ்கந்தப் பெருமானுறை, யாழ். ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரியையும், மக்களின் வயிற்றுப்பசியை நீக்க அன்னசத்திர மொன்றையும் அமைத்து, வள்ளலார் மழவராயர் கந்தையா அவர்கள் அனைவர் உள்ளங்களிலும் நிலையான இடத்தினைப் பெற்றுள்ளார்கள்.

இந்நிறுவனங்கள் யாவும் எதுவித தடங்கலும் இன்றி தொழிற்பட வேண்டும் என்ற நோக்கில், அசையும், அசையாச் சொத்துக்களை வாரிவழங்கியதோடு அவற்றிற்கான தர்ம சாதனங்களையும் வழங்கினார்கள்.

வள்ளலாரின் நற்கொடைகள் காரணமாக, இன்று கல்லூரியில் சோமஸ்கந்தப் பெருமானுக்கு நித்திய பூசைகள், நாயன்மார்களின் குரு பூசைகள் நலிவடைந்த சிறார்களின் ஈடேற்றத்திற்காக மாலை நேர பின்னூட்டல் வகுப்புக்கள், மாணவர்களின் ஆன்மீக வளர்ச்சிக்காக, மாவட்ட மட்டத்தில் திருக்குறள் மனனப் போட்டிகள், பல்கலைக்கழக அனுமதி பெறும் மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டம் போன்ற நற்பணிகள் நடைபெற்று வருகின்றன.

வள்ளலாரின் குறிக்கோள்களை நிறைவுசெய்யும் வகையில் எமது கல்லூரியில் கல்விபயின்ற மாணவர்கள், கல்விமான்களாகவும், சமூகத் தொண்டர்களாகவும், பல்வேறு துறைகளிலும் உயர் பதவி வகிப்பவர்களாகவும் திகழ்கிறார்கள். தாபகரின் நற்பணிகளால் பயன்பெற்ற இக் கல்லூரச் சமூகத்தினர், அவர்களின் ஜனன தினமாகிய புரட்டாதித் திங்கள் பத்தாம் நாளினை செய்ந்நன்றி உணர்வுடன் நினைவு கூர்ந்து விழாவாகக் கொண்டாடுகிறார்கள்.

*வாழ்க வள்ளலார் புகழ்வளர்க ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி.*

வ.ஆறுமுகம்
கல்லூரி அதிபர்.
புத்தூர்


**கணேசன் ரெக்ஸ்**
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

**சாரங்கன் நகைமாடம் அன்ட் சென்ரர்**
45, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**ரட்ணம்ஸ் பாட்டா**
49, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**CITY TAILORS**
Specialist in Wedding Coats & Suits
73, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

**ரவி & ராஜ் சில்க்ஸ்**
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

**றெக்ஸ் ரெயிலேர்ஸ்**
51, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**ஜெயானந்தம் பாதணித் திருத்தகம்**
PROP.: த.ஜெயானந்தம்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**யாழ்.வாச் வேக்ஸ்**
55, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**மதுரா நகைமாடம்**
T.P.: 2804
59, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**EVEREST WATCH WORKS**
எவறெஸ்ற் வோச் வேக்ஸ்
65, Kasthuriar Road,
Jaffna.

**விஷ்ணு பவான் சைவ உணவகம்**
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

# ஜே.வி.பி. அரசியலுக்கு வரமுடிந்தால் புலிகளுக்கு ஏன் அது பொருந்தாது?

## கேள்வியெழுப்புகிறார் வெளிவிவகார அமைச்சர்

கொழும்பு,செப்.10

எண்ணற்ற மக்களைக் கொலை செய்த ஜே.வி.பி. அரசியல் நீரோட்டத்தில் இணைந்து கொள்ளமுடியுமானால் அரசியல் நீரோட்டத்தில் இணைந்துகொள்ள விடுதலைப் புலிகளுக்கு ஏன் சந்தர்ப்பம் வழங்கக் கூடாது?

வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ இவ்வாறு கேள்வி எழுப்பியிருக்கிறார்.

'சண்டே வீர்' பத்திரிகைக்கு அவர் வழங்கிய செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

ஜே.வி.பி. எத்தனையோ ஆயிரம் இளைஞர்களைப் பலிகொண்டது. நாட்டில் தீராதவடுவை ஏற்படுத்திய அந்த அமைப்பு, பின்னர் ஜனநாயக நீரோட்டத்தில் கலந்துகொள்ளச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டு ஒரு அரசியல் கட்சியாகவும் அங்கீகரிக்கப்பட்டது. ஆனால், அந்த அமைப்பின் தற்போதைய செயற்பாடுகள் அரசிற்கு எதிரானதாகவும் மிகவும் தீவிரமானதாகவும் உள்ளன.

அரசுக்கு எதிராகச் செயற்படும் எந்த ஓர் அமைப்பையும் அரசாங்கம் தடைசெய்வதற்குத் தயங்காது. ஜே.வி.பி. உட்பட எந்த அமைப்பும் ஆயுதமேந்தும்போது தடைசெய்யப்படும்.

விடுதலைப் புலிகள் மீதான தடையும் அவ்வாறானதே. தற்போது தடைநீக்கப்பட்டுள்ளது. தேவைப்படின் மீண்டும் தடைவிதிக்கப்படலாம்.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-12-9)



தேசிய சேமிப்பு வங்கியின் தலைவரும், ஐ.தே.கட்சியின் உப தலைவர்களில் ஒருவருமான வி.எம்.சுவாமிநாதன் 'உதயன்' அலுவலகத்துக்கு வந்திருந்தபோது எடுத்த படம்.

# சர்வதேச கிரிக்கெட் மைதானம் குடாநாட்டில் விரைவில் அமைப்பு

## இடம் தெரிவுசெய்யக் கோரிக்கை

குருநகர்,செப்.10

சர்வதேச தரத்திலான கிரிக்கெட் மைதானம் ஒன்றை குடாநாட்டில் அமைப்பதற்கான நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பிக்கப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குடாநாட்டில் சர்வதேச மைதானம் ஒன்றை அமைப்பதற்கான இடத்தைத் தெரிவுசெய்து அரச அதிபர் மூலம் அறிவிக்குமாறு யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தை வடக்கு - கிழக்கு மாகாண கிரிக்கெட் சங்கம் கேட்டுள்ளது. அண்மையில் தம்புள்ளவில் நடைபெற்ற வடக்கு - கிழக்கு மாகாணங்களிலுள்ள கிரிக்கெட் சங்கங்களின் செயலாளர்கள், பயிற்றுநர்கள் கலந்துகொண்ட கூட்டத்திலேயே யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்திடம் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள 9 மாவட்டங்களைச் சேர்ந்த கிரிக்கெட் சங்கங்களின் செயலாளர்கள், கிரிக்கெட் பயிற்றுநர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

யாழ்.மத்திய கல்லூரி மைதானம், சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானம், யாழ்ப்பாணக் கல்லூரி மைதானம் ஆகியவற்றில் புற்தரை கிரிக்கெட் ஆடுகளங்களை அமைப்பது குறித்தும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.

இவை குறித்து ஆராய்வதற்காக, இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் முன்னாள் தலைவர் திலங்க சுமதிபால நாளை புதன்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வரவுள்ளார். (ம-51)

### பொன்னாலைமுதல் சுழிபுரம் வரை

# விவசாய நிலங்களில் உள்ள கண்ணிகளை அகற்றுங்கள்

## விவசாயக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை

வலி.மேற்கு.செப்.10

பொன்னாலையில் இருந்து சுழிபுரம் வரையில் அமைந்துள்ள படையினரின் முன்னரங்க நிலைகளுக்குச் சமீபமாக உள்ள விவசாய நிலங்களில் புதைந்துள்ள கண்ணிகளை அகற்ற உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் வலி.மேற்கு பிரதேச செயலகத்தில் நடைபெற்ற விவசாயக் குழுக்கூட்டத்திலேயே விவசாயிகளால் இந்தக் கோரிக்கை வலியுறுத்தப்பட்டது.

மேற்படி பிரதேசத்தில் உள்ள விவசாய நிலங்களில் இப்முறை காலபோக செய்கையில் ஈடுபடுவதற்கு வசதியாக அங்கு புதைக்கப்பட்டுள்ள கண்ணிகள் விரைவில் அகற்றப்பட வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தினர்.

இம்முறை பெரும் போகச் செய்கை குறித்தே இக்கூட்டத்தில் முக்கியமாக ஆராயப்பட்டது. விதை நெல்லை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படும் என்று அங்கு தெரிவிக்கப்பட்டது.

அராலி தெற்கு பிள்ளையார் கோயிலடியில் சேதமடைந்துள்ள மதகை மழைகாலத்துக்கு முன்னர் திருத்தியமைக்க வேண்டும் என்றும் -

பெரும்போக காலங்களில் கட்டாக்காலிகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் -

விவசாயிகளால் மேலும் வலியுறுத்தப்பட்டது. (ம-175)

# நாட்டார் வழக்கியல் பட்டப்படிப்பு இங்கு விரைவில் ஆரம்பிக்கப்படும்

## யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் தெரிவிப்பு

யாழ்.பல்கலைக்கழகத்தில் நாட்டார் வழக்கியலை அடிப்படையாகக் கொண்ட பட்டப்படிப்புத்துறை விரைவில் ஆரம்பிக்கப்படும்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேரா. பாலசுந்தரம்பிள்ளை.

கலைஞர் மெற்றாஸ்மயிலின் கலைத் தொண்டைப் பாராட்டி ஏற்பாடு செய்யப்பட்ட பாராட்டு விழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றியபோதே துணைவேந்தர் இவ்வாறு தெரிவித்தார்.

விழாவில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கலைத்துறையில் தங்கக் கிரீடம் சூட்டப்பட்ட ஒரே கலைஞர் மெற்றாஸ்மயில்தான். யாழ்ப்பாணத் தில் எந்த ஒரு கலைஞரும் இவ்வாறு கௌரவிக்கப்படவில்லை.

கொழும்பில் நடிகர்திலகத்திற்கு பொற்கிரீடம் சூட்டப்பட்டது. நாதஸ்வரக் கலைஞர் பத்மநாதனுக்கு கனடாவில் வாழ்ந்த தமிழர்களால் தங்கத்தால் ஆன நாதஸ்வரம் அன்பளிப்புச் செய்யப்பட்டது. யாழ்ப்பாணத்தில் தங்கக் கிரீடம் சூட்டி கௌரவிக்கப்படும் கலைஞர் இவர்தான்.

எமது பல்கலைக்கழகத்தில் நுண்கலைத்துறை சார்ந்த பட்டப்படிப்பு அலகை ஏற்படுத்தியுள்ளோம். சித்திரமும் வடிவமைப்பும் என்ற புதிய துறையையும் ஆரம்பித்துள்ளோம். நாட்டார் வழக்கியலையும், கிராமிய கலைகளையும் கொண்ட பட்டப்படிப்பு அலகொன்றை ஆரம்பிக்க எமது பேராசிரியர்களுடன கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விரைவில் இத்துறை ஆரம்பிக்கப்படும்.

கிராமியக் கலைகள் அழிந்துவிடுமோ என்ற மெற்றாஸ்மயிலின் பயத்தை நீக்கி கலைகளை வளர்ப்போம். அவருக்குத் துணையாக அவரது கிராமியக் கலைத் தொண்டிற்கு உறுதுணையாக என்றும் இருப்போம். அவருக்கு எமது பாராட்டுக்கள் - என்றார்.

இந்த விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய கலைப்பீடாதிபதி கோபாலகிருஷ்ணஐயர் தெரிவித்ததாவது:-

கலைகள் அழிந்தொழிந்துபோகும். யுத்த காலத்திலும், யுத்த சூழ்நிலையில் கலைஞர்களை இனங்கண்டு வளர்த்தெடுப்பவர் மெற்றாஸ்மயில். கலைப் பாரம்பரியத்தில் இளைஞர்களை இணைத்துவருகின்ற பெருமையும் அவருக்கே உரியது.

கடந்த மாதம் 17ஆம் திகதி கலைஞர்களுக்கு கிரீடம் சூட்டி மகிழ்ந்தவர். தான் வாழ்ந்து மற்றவர்களையும் வாழவைப்பவர். அவரது கலைச் சேவையையிட்டு தமிழ் கூறும் நல்லுலகம் பெருமைப்படுகிறது - என்றார்.

இவ்விழாவில் கலாநிதி கருணாகரன், சொல்லின் செல்வர் ஆறு.திருமுருகன், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தை சேர்ந்த இளையதம்பி தயானந்தா மற்றும் பேராசிரியர் சண்முகதாஸ் உட்பட பலர் பாராட்டுரை வழங்கினர்.

விக்ரோறியாக் கல்லூரியின் மாணவர்கள் வழங்கிய சிந்து நடைக் கூத்தும் அரங்கேற்றப்பட்டது. இறுதியில் மதிய உணவு சகலருக்கும் வழங்கப்பட்டது. (ம-ரி-54-131)

### மழைவேண்டி கொடும்பாவி இழுக்க நடவடிக்கை

காலபோக நெல்விதைப்பை ஆரம்பிப்பதற்கு உரிய நேரத்தில் பருவமழை பெய்யாததை அடுத்து மழை வேண்டி கொடும்பாவி கட்டி ஊர்வலமாக இழுப்பதற்கு மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனத்தினர் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த வாரமும் மழைபெய்யாதவிடத்து கொடும்பாவி கட்டி இழுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமென்று சம்மேளனத்தின் தலைவர் இ.பொ.வ.க முதலியார் தெரிவித்தார்.

சுழிபுரம் பகுதியிலும் மழை வேண்டி கொடும்பாவி ஊர்வலமாக எடுத்து செல்லப்பட்டு எரிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது. (ம-135)

# ரூபா 27 லட்சம் செலவில் புதிய கால்நடை வைத்திய அலுவலகம்

## வட்டுக்கோட்டையில் நிறுவப்படும்

அச்சுவேலி, செப்.10

வட்டுக்கோட்டையில் ரூபா 27 லட்சம் செலவில் பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகம் நிறுவப்படவுள்ளது.

யாழ்.மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின ஏற்பாட்டில் இந்த புதிய கட்டடம் கட்டுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் இரண்டு கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகங்களை நிறுவுவதற்கு என ஒதுக்கீடு செய்யப்பட்ட 53 லட்சம் ரூபா நிதியில் இருந்தே இது நிறுவப்படவுள்ளது. மற்றைய கட்டடம் கோப்பாயில் 26 லட்சம் ரூபா செலவில் நிறுவப்படும். (ம-11)

# ஓகஸ்டில் மட்டும் தென்மராட்சியில் 2000 குடும்பங்கள் மீளக்குடியமர்வு

தென்மராட்சி,செப்.10

தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த ஓகஸ்ட் மாதத்தில் மட்டும் 2001 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 643 பேர் தமது சொந்த இருப்பிடங்களில் மீளக் குடியமர்ந்துள்ளதாக பிரதேச செயலக புள்ளி விவரங்கள் மூலம் தெரியவருகிறது.

வடமராட்சி, வலிகாமம் ஆகிய பகுதிகளிலிருந்து ஆயிரத்து 247 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 896 பேரும், ஏனைய மாவட்டங்களிலிருந்து 754 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 747பேரும் மீளக் குடியமர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஓகஸ்ட் மாதம்வரை 14 ஆயிரத்து 727 குடும்பங்களைச் சேர்ந்த 54ஆயிரத்து 283 பேர் ஏற்கனவே தமது சொந்த இருப்பிடங்களில் மீளக்குடியமர்ந்துள்ளனர். இவர்களில் 2ஆயிரத்து 789 குடும்பங்களைச் சேர்ந்த 7ஆயிரத்து 941பேர் பிறமாவட்டங்களிலிருந்து தென்மராட்சிப் பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்தவர்களாவர்.

2000ஆம் ஆண்டு இடம்பெயர்வின்போது 19ஆயிரத்து 673 குடும்பங்களைச் சேர்ந்த 72 ஆயிரத்து 71பேர் தென்மராட்சியில் குடியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரதேசத்தின் ஆறு கிராம அலுவலர் பிரிவுகளில் இன்னமும் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படாததாலும் -

மூன்று கிராம அலுவலர் பிரிவுகளில் பல குடும்பங்கள் மீளக் குடியமர முடியாத நிலை உள்ளதாலும் -

இப்பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் ஏனைய பிரதேசங்களில் தங்கியுள்ளனர். (ம-117)

### மிதிவெடி விழிப்புணர்வு வீதி நாடகம்

கொழும்புத்துறை,செப்.10

தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் யுனிசெப் நிறுவனமும் இணைந்து மிதிவெடி விழிப்புணர்வு தொடர்பான தெருவெளி நாடகம் ஒன்றினை மேடையேற்றி வருகின்றன.

'அடி சுடும் அனல்வெளி' என்னும் இந்தத் தெருவெளி நாடகம் யாழ்.குடாநாட்டின் அனைத்து இடங்களிலும் காண்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தே.தேவானந்தின் நெறியாள்கையிலும் உருவான இந்நிகழ்வு முதன் முதலாக நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கொழும்புத்துறை செபமாலை மாதா ஆலய முன்றிலில் மேடையேற்றப்பட்டது. பெரும் எண்ணிக்கையானோர் இந்த நாடகத்தைப் பார்வையிட்டனர். (எ-ரி)

# தென்மராட்சி வலயப் பாடசாலைகளில் ஆங்கில மொழிமூலமான கற்கை!

தென்மராட்சி,செப்.10

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் பயிலும் மாணவர்களுக்கு ஆங்கில அறிவினை வளர்க்கும் பொருட்டு பாடங்களை ஆங்கில மொழியில் கற்பிப்பதற்கான விசேட வகுப்புகளை நடத்த வலயக் கல்வி அலுவலகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

தரம் நான்கு தொடக்கம் தரம் 11 வரை மாணவர்களுக்கே ஆங்கில மொழிமூல விசேட வகுப்புகள் பாடசாலைகளில் நடத்தப்படவுள்ளன.

முதல்கட்டமாக சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை, மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம் ஆகியவற்றில் தரம் 4 மாணவர்களுக்கான ஆங்கில மொழிமூல விசேட வகுப்புகளை வலயக் கல்விப் பணிப்பாளர் வை.செல்வராஜா அண்மையில் ஆரம்பித்து வைத்தார்.

இந்த மாணவர்களுக்கு ஆங்கிலம், கணிதம், சமூகக்கல்வி ஆகிய பாடங்கள் வாரத்தில் நான்கு நாள்கள் ஆங்கிலம் மொழியில் கற்பிக்கப்படும் எனவும் -

இதற்காக மாதாந்தம் ஒவ்வொரு மாணவரிடமும் கட்டணமாக 200 ரூபா அறவிடப்படுமெனவும் -

வலயப் பாடசாலைகளில் நிலவும் ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை நீங்கியதும் ஏனைய பாடசாலைகளிலும் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுமெனவும் -

தெரிவிக்கப்பட்டது. (ம-117)

### நெடுங்குளம் வீதி திறக்கப்பட்டது

கொழும்புத்துறை,செப்.10

கொழும்புத்துறை நெடுங்குளம் வீதி கடந்த வாரம்முதல் மக்கள் பாவனைக்கு திறந்துவிடப்பட்டுள்ளது.

இப்பகுதியிலுள்ள இராணுவ முகாம் ஊடான போக்குவரத்து இதுவரை காலமும் தடைசெய்யப்பட்டிருந்தது. இப்பகுதியில் மக்கள் மீளக் குடியமர்ந்து வருவதையடுத்து மேற்படி வீதி திறந்துவிடப்பட்டுள்ளது.

அதேவேளை -

நெடுங்குளம் வீதியின் கிழக்குப் பகுதியிலும் மக்கள் குடியமர விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டு மீளக் குடியமர அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (எ-ரி)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

புறோயிலர் இறைச்சிக்கோழிகள், கல்பேட்ஸ், சேவல்கள் என்பன விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செயது வேண்டிய அளவுகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: சிவா, பருத்தித்துறை வீதி (வட்டக்குளம் முன்பாக), கட்டப்பிராய். (7980)

ஊரெழு மேற்கில் பலாலி வீதிக்கு அருகில் 8 பரப்புக் காணியுடன் வீடும சேர்ந்தாற்போல் 14 பரப்புத்தோட்டக்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: K.கனகசபாபதி, நில அளவையாளர், ஊரெழு கிழக்கு, சுன்னாகம். (8080)

டிஸ் அன்ரனா 10 அடி டிஜிட்டல் (DSR - 2800) றிசீவர் L.N.BF பகுபிக் புதியது Sony 3CD Minihi -Fi MHC VX 333 செற் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 213B, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P 2863 (8121)

புதிய Box கிற்றார் Bag, Belt PIC - Up உடன், 60W Ac.Dc அம்பிளிவயர், 15w Dc அம்பிளிவயர், கிரம்போன் (England), 2 ஊசிப் பெட்டி 20 ரெக்கோட்டுடன், BSA லைசிக்கிள், சிறிய 4 Speaker Box என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: BRO.T கணேசன்,261/5, கண்டி றோட், யாழ்ப்பாணம். (கதிர்ச் செல்வன் பில்டிங்க்கு அருகில். (8110)

நல்ல நிலையிலுள்ள அச்சு இயந்திரம் விற்பனைக்கு உண்டு. விலை ரூபா 200000/- (இரண்டு லட்சம்) தொடர்பு: திருதங்கராசா, வேளாதோட்டு, கல்வியங்காடு. (8016)

உரும்பிராய் வடக்கு, ஞானசம்பந்தர் ஒழுங்கை, சின்னராசா (சங்கரத்தை) தோட்டத்திற்கு அருகில் 10 பரப்புக் காணியும், வீடும் மலிவான விலையில் விற்பனைக்கு உண்டு. வாங்க விரும்புவோர் தொடர்புகளுக்கு: பூதப்பிள்ளை நவரட்ணம் (காந்தி), கற்பகப் பிள்ளையார் கோயில் வீதி (நவசக்தி சனசமூக நிலையத்திற்கருகில்), உரும்பிராய் வடக்கு, உரும்பிராய். (8116)

## தவறிவிட்டது

மீசாலை வடக்கைச் சேர்ந்த வினாசித்தம்பி புஸ்பராணி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.708282553V), கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை என்பன முகமாலையில் இருந்து யாழ்வரும்போது பஸ்ஸில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மீசாலை, புத்தூர்ச் சந்தியில் உள்ள விக்கினேஸ்வராக் கல்லூரியத்தில் ஒப்படைத்து உதவவும். (8119)

## வாடகைக்கு

சிறிய காணி யாழ்.நகரில் வாடகைக்கு உண்டு. நகை வேலை செய்பவர்களுக்கும், சிறிய குடும்பத்தினருக்கும் தற்காலிக வதிவிடமொன்றினை அமைத்துப் பாவிக்கலாம். தொடர்பு: 50, ஸ்ரீ வெங்கடேசன் வீதி, யாழ்ப்பாணம். (சயன்ஸ் ரியூசன் முன்பாக) (8113)

## ஒரு காதலின் கதை

சிங்களம் மட்டும் சட்டம், சத்தியாக்கிரகம், 1958ஆம் ஆண்டு இனக் கலவரம், இலங்கையின் முதலாவது அகதி முகாம் எல்லாம் வருகின்றன. அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதியது ரூபா 150/- (8054)

## சுய வேலைவாய்ப்பு

யாழ்.மண்ணில் முதல்முறையாக 'பிறின்ரிங்' செய்வது எப்படி? இன்றுமுதல் வகுப்புகள் ஆரம்பம்.

ஓடர்கள் செய்துகொடுக்கப் படும்.

தொடர்பு:
எஸ்.நிசாந்தன்,
18/5, மாட்டீன் றோட்,
யாழ்ப்பாணம்.

(8111)

## விற்பனைக்கு



HONDA-C.B.R-250 CC

தொடர் இலக்கத்தைக் கொண்ட மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: பா.சுரேஸ்கரன்
JAFFNA TECHNICAL INSTITUTE
PALALY ROAD, URUMPIRAI.

(8115)

## நான்காம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 21 - 05 - 1981



உதிர்வு 25 - 08 - 1998

### செல்வி நாகேந்திரம் நிஷாலினி (சுகி)

(பரு/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை பழைய மாணவி)

திதி: ஆவணிச்சதுர்த்தி 10.09.2002

*நான்காண்டுகளே நாழிகைபோல் கழிந்ததம்மா!*
*நசுக்கிடாமல் காய் நகர்த்தியோன் நாடோடியானாரம்மா!*
*நாடே உனக்கு நடந்த அக்கிரமத்தை அங்கீகரிக்குதம்மா!*
*நாடிருக்கு மட்டும் "சுகி" நாமம் நிலைக்கட்டும்.*

உமது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*"சுகிஸ்தான்"*
*அல்வாய் தெற்கு,*
*அல்வாய்.*

உமது பிரிவால் என்றென்றும் வாடி நிற்கும்:
பெற்றோர், உறவினர்கள்.

(8117)

## வணிக மன்ற பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,செப்.10

மீசாலை கைத்தொழில் வணிக மன்றத்தின் விசேட பொதுக்கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு மீசாலை விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பல முக்கிய விடயங்கள் பற்றி இறுதி முடிவெடுக்க இருப்பதால் தமது வியாபார நிலையங்களைப் பதிவுசெய்த அல்லது பதிவு செய்யாத உரிமையாளர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கைத்தொழில் வணிக மன்றத் தலைவர் கேட்டுள்ளார். (ஒ-ரி)

## சங்கானையில் பாவனைக்கு உதவாத வீதி

சங்கானை சந்தையருகே பிரதான வீதியிலிருந்து செல்லும் ஓடக்கரை வீதி போக்குவரத்துக்கு உதவாத நிலையிலுள்ளதாகக் கூறப்படுகிறது. இருபது வருடங்களுக்கு மேலாகத் திருத்தப்படாமல் இருக்கும் இவ்வீதியின் ஒரு பக்கம் விற்பனை நிலையங்களும், மறுபக்கம் சந்தையும் உள்ளதால் ஏராளமான மக்கள் இவ்வீதியை பெரும் சிரமத்தின் மத்தியில் பயன்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ-29)

## யாழ்.மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் (வ.து)

### ஆண்டுப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் - 2002

காலம் : 29.09.2002 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி
இடம் : வை.எம்.சீ.ஏ. மண்டபம், கச்சேரியடி, யாழ்ப்பாணம்.
தலைமை : திரு.சி.தருமசேகரம் அவர்கள் (உபதலைவர்)
முக்கிய குறிப்பு : அங்கத்தவர்களின் பிரேரணைகள் 20.09.2002ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரைக்கும் அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும்.

*சகல அங்கத்தவர்களும் தவறாது சமுகந்தரவும்.*

*215, பழைய பூங்கா வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(8114)

இ.அரிகரன்
*கௌரவ செயலாளர்.*

## சொலெக்ஸ் ஒப்ரிக்கல் & லக்ஷறி டென்ரல் வேக்ஸ்

உங்கள் கண்களைப் பரிசோதித்து அதற்குத் தகுந்த வகையில் வெளிநாடுகளிலிருந்து தருவிக்கப்பட்ட பிறேம் வகைகளினால் தயாரிக்கப்பட்ட கண்ணாடிகளையும், சண் கிளாஸ், மாபிள் கண் வகைகளையும் பெற்றுக்கொள்ளவும்.

மேலும் உங்கள் முக அமைப்புக்கேற்ப சங்குப் பற்களைக் கட்டிக்கொள்ளவும் மிதப்புப் பற்களுக்குக் கிளிப் செய்து குறுகிய காலப்பகுதிக்குள் சீர்செய்துகொள்ளவும்

*நாடுங்கள்:*

சொலெக்ஸ் மூக்குக் கண்ணாடியகம் & லக்ஷறி பல்கட்டும் நிலையம்

*232/A, கண்டி வீதி,*
*(பிரதேச செயலகம் முன்பாக), சாவகச்சேரி.*

(C/23752)

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சித்திரபானு வருடம் ஆவணி மாதம் 26ஆம் நாள் (11-09-2002 புதன்கிழமை காலை 07-.02 மணிமுதல் 08.38 (புதிய நேரம்) மணிவரையுள்ள கன்னிலக்கினமும் சித்தயோகமும் சுவாதி நட்சத்திரமும்கூடிய சுபமுகூர்த்தசுபவேளையில்

எமது சிரேஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**சத்தியன்**
அவர்களுக்கும்



எமது புத்திரி
திருநிறை செல்வி
**பூரணி**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு சட்டநாதர் வீதி, நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் திருமாங்கல்யதாரணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

(8125)

திரு.திருமதி சா.பாலேந்திரன்,
'அன்னை இல்லம்'
ஞானபாஸ்கரோதய சங்க வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

(இருவீட்டார் அழைப்பு)

திரு.திருமதி க.ஸ்ரீபதி
ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில், யாழ்ப்பாணம்.


உ

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சித்திரபானு வருடம் ஆவணித்திங்கள் 27ஆம் நாள்(12.09.2002) வியாழக்கிழமை முற்பகல் 9 மணி 4 நிமிடத்திலிருந்து 10 மணி 40 நிமிடம் வரையுமுள்ள துலா லக்கினமும் அனுச நட்சத்திரமும் கூடிய சுபமுகூர்த்த நல்வேளையில்

எமது செல்வப் புதல்வன்
திருநிறை செல்வன்
**மகேந்திரன்(மகேன்)**
அவர்களுக்கும்



எமது செல்வப் புதல்வி
திருநிறை செல்வி
**ரஜனி(சாந்தி)**
அவர்களுக்கும்

தெய்வத்திருவருளை முன்னிட்டு திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டுத் திருமணம் லண்டனில் நடைபெறுகிறது என்பதை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

**திருமணம் நடைபெறும் இடம்:**

**ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயம்**
5, Chapel Road, West Ealing, London W13 9AE.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

திரு.திருமதி செல்லத்துரை
தாமோதரம்பிள்ளை வீதி,
சாவகச்சேரி.

(8118)

திருமதி வடிவேலு
குருச்சைக்கட்டி,
புலோலி வடமேற்கு, புலோலி.

# விக்கினம் தீர்க்கும் விநாயகர் அகத்தூய்மையைத் தந்திடுவார்

**விநாயகப்பெருமானுக்குரிய விசேட வழிபாட்டுத் தினங்களில் ஒன்றான ஆவணி சதுர்த்தி இன்றாகும். அதனை முன்னிட்டு இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.**

'ஓம்' என்பதற்கு உரிய தமிழ் எழுத்தாகிய ஓகாரம் துதிக்கையுடன் கூடிய யானைமுகம் போனறு காணப்படுகிறது. படைப்புக்கு முதலாகத் தோன்றிய அவ் ஓங்கார ரூபமாக விளங்குபவர் பிள்ளையார். உலகத்திற்கு மூலமாய்த் தோன்றிய ஓங்காரம் திருமுகமாகவும், உலகங்களின் தொகுப்பாய் அமையும் இடம்



பெருவயிறாகவும், உலகத்தைத் தாங்கும் காலாகவும் அமையப் பெற்ற ஒப்பற்ற திருவடிவமே பிள்ளையார் வடிவமாகும்.

இத்தகைய மேலான 'முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில் முற்பட எழுதிய முதல்வனை' நினைந்து அனுஷ்டிக்கும் விரதங்களில் விநாயகர் சதுர்த்தி, சுக்கிரவாரம் என்னும் வெள்ளிக்கிழமை விரதம், விநாயகர் சஷ்டி விரதம் என்பன குறிப்பிடத்தக்கன.

சமயங்கள் தோறும் கடவுள் வழிபாட்டு தொடர்பினை கைவரச் செய்வன விரதங்களே ஆகும். விரதத்திற்கு நோன்பு, கிழமை, உபவாசம் எனவும் பெயர்கள் உள்ளன. மனம் பொறி வழிப்போகாது நிற்றற் பொருட்டு உணவைவிடுத்தேனும், சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் எனும் முக்கரணங்களினாலும் கடவுளை மெய்யன்போடு வழிபடுதலே விரதம் என்பார். நாவலர் பெருமான் 'காப்பது விரதம்', 'நோன்பென்பது கொன்று தின்னாமை', 'நோநோன்பு சீராகாது', 'மோனமென்பது ஞான வரம்பு' போன்ற சுலோகங்கள் விரதத்தின் தன்மையை நன்கு உணர்த்தும்.

ஆன்ம ஈடேற்றத்தின் பொருட்டு இன்னகருமம் செய்யவேண்டியது என்றும், என்னபாவம் ஒழிக்கப்பட வேண்டியது என்றும், தத்தம் சக்திக்கு பொருந்தும்படி வரையறுத்துச் செய்யும் விரதங்களில் விநாயகர் சதுர்த்தி முதன்மை பெறுகிறது. விநாயகர் சதுர்த்தி என்பது ஆவணி மாதத்தில் வரும் வளர்பிறை காலத்து நான்காம் நாள் என்னும் சுக்கில பட்சத்து சதுர்த்தி ஆகும். இந்நாள் ஆவணிமாதமும், சோமவாரமும், விசாகநட்சத்திரமும், சிம்ம லக்கினமும் கூடிவருமானால் சிறப்புக்குரிய நாளாக அமையும்.

'கதிரவன் சிங்கராசியில் இருக்கும் போது அதற்குரிய ஆவணி மாதமே ஆண்டின் முதல் மாதமாக கருதப்பட்ட காலத்தில் ஓங்கார தெய்வ வணக்கம் எல்லோராலும் நிகழ்த்தப்பட்டு வருவதாயிற்று' என்று ஞானவடிவான விநாயகப்பெருமானின் ஆவணி சதுர்த்தி பெருமையுடன் பேசப்படுகிறது.

விநாயக சதுர்த்தியில் பெருமானுக்கு எண்ணெய், தேன், தயிர், பால், இளநீர், எலுமிச்சம்பழம், பஞ்சாமிர்தம், சந்தனம், மஞ்சற்பொடி, மாப்பொடி முதலியவற்றினால் அபிஷேகம் செய்வர். அவல், நெல்லுப் பொரி, வெல்லம், எள்ளுருண்டை, கடலை, மோதகம், கொழுக்கட்டை, கரும்பு, பழங்கள் போன்றவற்றை நிவேதிப்பர். அறுகு, வன்னிப்பத்திரம், கையாந்தகரை, வில்வம், ஊமத்தை, நொச்சி, நாயுருவி, வன்னி, அலரி, மாதுளை, நெல்லி முதலியவற்றால் அர்ச்சிப்பர்.

ஏனைய பத்திரங்கள் கிடைக்காத விடத்து சதுர்த்தியன்று நோன்பிருந்து அறுகம் புல்லாலேனும் பூசை செய்தல் முக்கியமானதாகும். விநாயகப் பெருமானுக்கு படைக்கின்ற பண்டங்களை எல்லோருக்கும் பகிர்ந்து கொடுத்து எல்லோரையும் மகிழ்விப்பது விநாயக சதுர்த்தியின் முக்கிய அம்சமாகும். இதனாலே எல்லோரிடமும் முரண்பாடு நீங்கி ஒற்றுமை ஓங்குகிறது. இதன் அடிப்படையிலேயே முரண்பாடுகளை களைந்து, விக்கினங்களை தீர்ப்பதனா

**ப.றமேஸ்**

லேயே எம் பெருமான் விக்கினேஸ்வரர் என்று போற்றப்படுகின்றார்.

அவரவர் பக்தி, விருப்பம், பொருள், இடம், காலம், பருவம் போன்ற வசதிகளைக் கருதி பல வகையிலும் சதுர்த்தி விரதம் அனுஷ்டிக்கும்போது அகத்தூய்மை, புறத்தூய்மை, பொறுமை, ஈகை, உண்மை பேசுதல், புலனடக்குதல், அவாவை அடக்குதல், காரியசித்தி போன்ற பல நன்மைகள் ஏற்படும். எனவே எக்காரியமும் தொடங்கும் முன்னர் நாமெல்லாம் வழிபடும் ஓவாத சந்தத்து ஒலியாகிய, ஓங்கார ரூப விநாயகனுடைய ஆவணி சதுர்த்தி நன்னாளிலே முறையாக விரதம் இருந்து, பல சித்திகளையும் பெற்று வையத்துள் வாழ்வாங்கு வாழ்வோமாக. ★

# கொழும்புத்துறை மக்களின் இன்னல் குறித்து முறைப்பாடு

யாழ்ப்பாணம்,செப்.10

கொழும்புத்துறைப் பகுதியில் மீளக்குடியேறிய மக்கள் இயல்புநிலையில் வாழமுடியாமல் இன்னறபடுவதால், அவர்கள் பயன்படுத்துவதற்கு தடைவிதிக்கப்பட்ட வீதிகளை திறந்து விடுமாறு யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு கொழும்புத்துறை அகதிகள் நலன்புரிச்சங்கம் முறைப்பாடு செய்துள்ளது.

கொழும்புத்துறையில் மீளக்குடியேறிய மக்கள் கொழும்புத்துறை பிரதான வீதியில் துண்டிச் சந்திக்கு அப்பால் செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. அப்பால் செல்ல வேண்டியவர்கள் ஏ.வி.வீதியால் சென்று முருகேசர் ஒழுங்கை ஊடாக செல்ல வேண்டும் என கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு செல்வதால் மேலதிகமாக கணிசமான தூரம் பயணிக்க வேண்டி நேரிடுகிறது. அவ்வாறு செல்லும்போது 4ஆம் குறுக்குத்தெரு தொடக்கத்தில் மதகு உடைந்து போக்குவரத்துச் செய்யமுடியாமல் வீதி சேதமடைந்துள்ளது. சைக்கிளில் அல்லது நடந்து மட்டும்தான் செல்லக்கூடியதாக அந்தப் பாதை அமைந்துள்ளது.

மீளக்குடியேறிய மக்கள் தமது வீடுகளைத் திருத்துவதற்கு வாகனங்களில் பொருள்களை எடுத்துச் செல்லவோ - நோயாளர்களை வாகனங்களில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லவோ முடியாத நிலையில் உள்ளனர்.

கடற்கரைக்குச் செல்வதும் தடை செய்யப்பட்டுள்ளது. கொழும்புத்துறை பகுதியில் வாழும் பலர் தும்புத் தொழிலில் ஈடுபடுபவர்கள். ஆனால், தற்போது அவர்கள் கடற்கரையில் தேங்காய் மட்டைகளை ஊறவைத்து தும்பு பிரித்து தமது தொழிலை செய்யமுடியாமல் உள்ளது. இந்த விடயங்களை கொழும்புத்துறை அகதிகள் நலன்புரிச் சங்கம் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்குச் சுட்டிக்காட்டியுள்ளது. (ஒ-11)

## மதுவரித் திணைக்களத்தில்

# ஆளணி, வாகனவசதி இல்லை பணிகளைத் தொடரமுடியாத நிலை

## பொறுப்பதிகாரி கவலை தெரிவிப்பு

யாழ்.மாவட்டத்திலுள்ள மதுவரித் திணைக்களங்களின் கீழ் உள்ள பிராந்திய நிலையங்களுக்கு போதிய வாகன வசதிகள் செய்து தரப்படாமையால் தமது பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதுள்ளதாக யாழ். மாவட்ட மதுவரித் திணைக்கள பொறுப்பதிகாரி என்.சோதிநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ்.குடாநாட்டில் 5மதுவரி பிராந்திய நிலையங்கள் காணப்படுகின்ற போதிலும் அவற்றின் பாவனைக்கென ஒரேயொரு வாகனம் மட்டுமே மதுவரி ஆணையாளரினால் வழங்கப்பட்டிருக்கின்றது. அந்த வாகனத்திற்கும் இதுவரை நிரந்தர சாரதி எவரும் நியமிக்கப்படவில்லை. இதனால் குறித்த வாகனத்தை மதுவரித் திணைக்கள பொறுப்பதிகாரியே செலுத்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் -

இதன் காரணமாக இந்த வாகனத்தைக் கொண்டு 5பிராந்திய நிலையங்களினதும் கடமைகளை நிறைவேற்ற முடியாத நிலை காணப்படுகின்றது என்றும் - அவர் தெரிவித்தார்.

இ.்.து இவ்வாறிருக்க மதுவரித் திணைக்களத்தின் இன்ஸ்பெக்டர், 'சார்ஜன்ட்' தரத்திலான அதிகாரிகளுக்கும் பெரும்பற்றாக்குறை நிலவுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் 5மதுவரி நிலையங்களும், 2வடிசாராய உற்பத்தி நிலையங்களும் உள்ளன. இவற்றில் 19இன்ஸ்பெக்டர் தரத்திலான அலுவலர்களும், 50சார்ஜன்ட் தரத்திலான அலுவலர்களும் பணிபுரிய வேண்டிய நிலையில், தற்போது 7இன்ஸ்பெக்டர்களும், 25 சார்ஜன்ட் தரத்திலான அலுவலர்களுமே நிரந்தர நியமனத்தைப் பெற்று சேவையாற்றி வருகின்றனர். ஏனைய 12இன்ஸ்பெக்டர்களுக்கும், 25சார்ஜன்ட் தரத்திலான அலுவலர்களுக்குமான வெற்றிடம் தொடர்ந்தும் நிலவிவருகிறது.

இவ்வாறு வாகன மற்றும் ஆளணிப் பற்றாக்குறை காரணமாக ரோந்துப் பணிகளையும், ஏனைய இதர பணிகளையும் செவ்வனே நிறைவேற்ற முடியாதுள்ளதாகவும், இது தொடர்பாக தமது உயர்மட்டத்திற்கு தெரியப்படுத்திய போதும், ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் - அவர் மேலும் தெரிவித்தார். (எ-ரி)

## கணனி அன்பளிப்பு

வலி.மேற்கு,செப்.10

வட்டு.வடக்கு நன்மை விருத்தி சங்கத்தின் அறநெறிப் பாடசாலைக்கு இப்பகுதியைச் சேர்ந்த வெளிநாட்டில் வதியும் நரசிங்கம் சிவேந்திரன் என்பவர் கணனி ஒன்றினை அண்மையில் அன்பளிப்புச் செய்துள்ளார். (ம-175)

## குருநகர் மீனவர் கூட்டுறவுச் சங்க கூட்டம்

குருநகர்,செப்.10

குருநகர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 16ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு குருநகர் சனசமூக நிலையத்தின் பாலர் பாடசாலையில் நடைபெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-51)

# 'சோக்கல்லோ' சண்முகத்தின் உலக சாதனை முயற்சி!

சிறுவயதில் கலைத்துறை மீதிருந்த ஆர்வமிகுதியினால் நடிப்புத் துறையில் வைத்த காலடி, இன்று நாடறிந்த ஒரு பல்துறைக் கலைஞராக உருவாக்கியிருப்பதுடன், உலக சாதனையொன்றைப் புரியும் அளவுக்கு உயர்த்தியிருக்கிறது. அந்த வகையில் பெருமைக்குரியவர்தான் 'சோக்கல்லோ' சண்முகம் என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படும். ஏழாலையூர் தா.சண்முகநாதன்.

நான்கு தசாப்த காலத்திற்கு முன் எழுத்துத் துறையில் பிரவேசித்த இவரது கன்னிப்படைப்பான 'கோமதியின் கணவன்' நாவல், 'சாணா' எனற பெயரில் வெளியிடப்பட்ட கலை இலக்கிய மாத சஞ்சிகை, ஈழத்தின் பிரபல மூத்த எழுத்தாளரான சிற்பியின் "கலைச்செல்வி" மாத சஞ்சிகையின் வெளியீடு தொடர்பாக ஐந்தாண்டு காலம் வெளிவந்துள்ளது. கிணறுகாவி, ஏழாலையூரான் போன்ற பெயரில் சிறுகதைகளையும் கட்டுரைகளையும் எழுதிவந்துள்ளமை என்பன கலை இலக்கியத் துறையில் ஆக்கபூர்வமான பங்களிப்பை எடுத்துக்காட்டுகின்றன.

"சீதனம்", "சரியா தப்பா", "அடிப்பன் பல்லுடைய", "கோடை", "எந்தையும் தாயும்" ஆகிய நாடகங்களிலும் "பொன்மணி", "தெய்வம் தந்த வீடு" போன்ற திரைப்படங்களிலும் இவர் நடித்திருக்கிறார். நம்நாட்டுக் கிராமிய கலை வடிவமான வில்லிசைக்கு, புத்துயிர் கொடுத்து வளர்த்து வருவதில் இவரது பங்களிப்பு பெரிதும் போற்றப்படுகிறது. "கண்மணியாள் காதை", "கவிராஜன் கதை", "சக்தியின் மகிமை" போன்ற தலைப்புகளில் கலைஞர் தா.சண்முகநாதனின் வில்லிசை நிகழ்ச்சிகள் மேடைகளிலும், வானொலி, தொலைக்காட்சி ஊடாகவும் ரசிகர்களை மகிழ்வித்து வருகின்றன.

வானொலி நிகழ்ச்சிகளுக்கு பிரதியாக்கம் செய்வது, வானொலியில் பௌத்த நற்சிந்தனை வழங்குவது, பௌத்த உரைபாடல் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வது போன்றவைகளுடன் வானொலி, பத்திரிகை நிருபராகவும் இவர் பணியாற்றி வருகிறார்.

இலங்கை வானொலியில் 1974 முதல் 1976ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் "புதிய உலகம்", "கிராமிய வளம்" ஆகிய நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கியிருக்கிறார்.

கதாபிரசங்கி, சமயச் சொற்பொழிவாளர், வானொலி நேர்முக வர்ணனையாளர் என்றெல்லாம் இவரது திறமைகளையும், பெருமைகளையும் பட்டியல் போட்டுக் கொண்டே போகலாம்.

கலைஞர் தா.சண்முகநாதனின் கடந்தகால கலை இலக்கிய ஊடகத்துறை சாதனைகளுக்கு மேலாக, நிகழவிருக்கும் அவரது உலக சாதனை அமையவிருக்கிறது.



ஒவ்வொரு சாதனைகளுக்கும் ஒவ்வொரு வடிவமும், தனித்துவமும் உண்டு. மேலான மனத்திடமும், உறுதியான நம்பிக்கையுமே சாதனைகளின் வெற்றிக்குக் காரணமாக அமைகின்றன. இது ஏனைய சாதனைகளையும் விட முற்றிலும் மாறுபட்டது. அதுதான் இடைவிடாது தொடர்ந்து 7 1/2 மணிநேரம் பேசுவது. இதன் மூலம் ஏற்கனவே கின்னஸ் புத்தகத்தில் பதிவிலுள்ள 1960 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 26ஆம் திகதியன்று அன்றைய கியூபா ஜனாதிபதி பிடல் கஸ்ரோ ஐக்கிய நாடுகள் சபையில் 4மணி 29நிமிடம் நிகழ்த்திய தொடர்பேச்சு சாதனையை முறியடிப்பதற்கான முயற்சியாகவே இது மேற்கொள்ளப்படுகிறது.

சாப்பிடுவதோ அல்லது தேநீர் அருந்துவதோ அல்லது வேறு எந்தவொரு கருமங்களின் போதோ பேசிக்கொண்டே அதனை மேற்கொளவதுதான் இந்த சாதனையின் சிறப்பம்சமாகும்.

கையில் எதுவித பேச்சுப்பிரதிகளும் இன்றி, "நானும் தமிழும்" என்ற தலைப்பில் சுயவாழ்வு விமர்சனமாக மனதிலிருந்து எழும் கருத்துக்களை வெளியிடுவதாகவே விரைவில் நிகழவிருக்கும் கலைஞர் தா. சண்முகநாதனின் நீண்ட தொடர் பேச்சு உலக சாதனை முயற்சிக்குத் துணைபுரிந்து வெற்றிபெற வேண்டும் என வாழ்த்துவோமாக.

இதற்கான அனுசரணையை தேசிய கலை இலக்கியப் பேரவை வழங்குகிறது.

- கொழும்பு தமிழ்ச்சங்கம்

## வீதி விபத்துக்கள் அதிகரிப்பு

வலி.மேற்கு,செப்.10

கடந்த சில மாதங்களாக சித்தன்கேணி நாற்சந்தியில் வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ளன. கடந்த சில நாள்களுக்கு முன்பு மோட்டார் சைக்கிளில் வந்த குடும்பஸ்தர் ஒருவர் வான் ஒன்றினால் மோதப்பட்டு அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

இச்சம்பவங்களைத் தொடர்ந்து சந்தியை உருவாக்கும் நான்கு வீதிகளிலும் வேகத்தடைகளை ஏற்படுத்துமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-175)

## பொருள்கள் அன்பளிப்பு

வன்னியில் இருந்து வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் மீளக் குடியமர்ந்த சுமார் 300 குடும்பங்களுக்கு பட்டினிக்கு எதிரான நிறுவனத்தினர் அண்மையில் உலர் உணவு அல்லாத பாவனைப் பொருள்களை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

பிளாஸ்ரிக் பாய், வாளி, லாம்பு, படுக்கை விரிப்புக்கள் போன்ற பொருள்களே இவ்வாறு விநியோகிக்கப்பட்டன. (ம-175)



யாழ். கமநல சேவை உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெற்ற விவசாயிகளுடனான கலந்துரையாடல் நிகழ்வினை கமத்தொழில் காப்புறுதி சபை பிரதிப் பணிப்பாளர் எஸ்.டபிள்யூ ஜெயலத் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதை படத்தில் காணலாம்.

மேற்படி சபையின் தலைவர் எல்.பி.பி.திஸநாயக்க, கால்நடை காப்புறுதி உதவிப் பணிப்பாளர் எஸ் வீரசிங்க, விவசாய ஓய்வூதிய பணிப்பாளர் டட்லி வீரக்கொடி, விவசாய மீன்பிடி ஓய்வூதிய உதவிப் பணிப்பாளர் எஸ்.டபிள்யூ கே.டீ.மஞ்ஞநாயக்கா ஆகியோருடன் கலந்துரையாடலுக்கு தலைமை வகித்த சி.பொ.வ.மா.க முதலியாரும் உடன் காணப்படுகின்றார். (எ-152)

## நன்றி நவில்கின்றோம்

காரைநகரைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட **சின்னத்தம்பி செல்வத்துரை** (*இளைப்பாறிய அரச வைத்தியர் R.M.P. Cey.*) 04.09.2002 அன்று சிவபதமடைந்தார். அவ்வேளையில் உதவி புரிந்த ஸ்ரீ விக்கினேஸ்வரா ஸ்ரோர்ஸ், றூபா பன்முக வர்த்தகம், சுப்பர் சூ பலெஸ், சீமாட்டி ஜவுளி சமுத்திரம், மங்கை சில்க்ஸ் உரிமையாளர்கள், ஊழியர்கள், திருநெல்வேலி சென்ரல் நேர்ஸிங்ஹோம், யாழ்.போதனா வைத்தியசாலை டாக்டர்கள், தாதிமார், உடனிருந்த பல்கலைக் கழக மாணவிகள், அயலவர்கள், உற்றார், உறவினர்கள் மற்றும் பல வழிகளிலும் உதவிபுரிந்த அனைவருக்கும் பணிவுடன் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

*இல.59, 4ஆவது ஒழுங்கை,*
*குருமன்காடு,*
*வவுனியா.*
*024-23800*

திருமதி தம்பையா தங்கம்மா,
த.தருமராசா (கஜபதி)
குடும்பத்தினர்.

(8129)

## ஆசிரியர் தேவை

**புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்.**

6ஆம் தரத்திலிருந்து உயர்தர வகுப்புகளில் தமிழ்மொழி கற்பிக்கக்கூடிய தராதரமுடைய ஆசிரியர் தேவை.

14.09.2002 சனிக்கிழமைக்குமுன் விண்ணப்பிக்கவும்.

(C/23758) - அதிபர்.

உ

## ஈவினை மத்தி கற்பக விநாயகர் கோயில்
## மஹோற்சவ விஞ்ஞாபனம்-2002

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | காலை | 10.00 மணி (11.09.2002) |
| வசந்த உற்சவம் | மாலை | 5.00 மணி (16.09.2002) |
| வேட்டைத் திருவிழா | மாலை | 5.00 மணி (18.09.2002) |
| சப்பரத் திருவிழா | மாலை | 6.00 மணி (19.09.2002) |
| தேர்த் திருவிழா | காலை | 10.00 மணி (20.09.2002) |
| தீர்த்தத் திருவிழா | பகல் | 10.00 மணி (21.09.2002) |
| வைரவர் பொங்கல | மாலை | 4.00 மணி (22.09.2002) |

*மஹோற்சவ குரு: சிவஸ்ரீ* **தியாக.கெங்காதர குருக்கள்**

*ஈவினை மத்தி,*
*புன்னாலைக்கட்டுவன்.* (8127) - விழாக் குழுவினர்.

## மாகாண சபை அதிகாரிகள் குழு யாழ்.வருகிறது

யாழ்ப்பாணம்,செப்.10

வடக்கு - கிழக்கு மாகாண பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள், கூட்டுறவுத்துறை அமைச்சின் செயலாளர் திருமதி கமலா சிவசிதம்பரம், வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் செல்வி து.விஜயலட்சுமி ஆகியோர் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு நாளை மறுதினம் வியாழக்கிழமை யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளனர்.

அன்று காலை வருகைதரும் இவர்கள் முற்பகல் 10.30 மணிக்கு யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களுக்கான கலந்துரையாடலில் பங்குகொள்வர்.

குடாநாட்டிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் கடந்தகால, நிகழ்கால, செயற்பாடுகள் தொடர்பாக இந்தக் கூட்டத்தில் ஆராயப்படும் என உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி. கிருஸ்ணசாமி தெரிவித்தார்.

(எ-ரி)

## அஞ்சல் தினத்தை முன்னிட்டு விசேட நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,செப்.10

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 9 ஆம் திகதி உலக அஞ்சல் தினமாகும்.

மேற்படி தினத்தை முன்னிட்டு இம்முறை யாழ்ப்பாணத்தில் மிகவும் விரிவான அளவில் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன என்றும் -

அத்துடன் அஞ்சல் திணைக்களத்தினால் சிறுகதை, கட்டுரை மற்றும் ஓவியப் போட்டிகளும் நடத்தப்படவுள்ளன என்றும் - யாழ்.மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் ச.சிவராஜசிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பான விவரங்கள் விரைவில் விளம்பரப்படுத்தப்படும் என்றும் - அவர் தெரிவித்தார்.

(எ-10)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி
### றீட்டா ஞானானந்தராஜா

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும், வத்தளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி றீட்டா ஞானானந்தராஜா 06.09.2002 புதன் கிழமை அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிமுத்து - ஞானநாயகி (ஆனந்தபூரணம்) ஆகியோரின் பாசமிகு மகளும் அந்தோனிமுத்து (தங்கத்துரை) - இருதயநாயகி (பாக்கியம்) ஆகியோரின் பாசமிகு மருமகளும், ஞானானந்தராஜாவின் (இளைப்பாறிய இலங்கை கடற்படை உத்தியோகத்தர்) பாசமிகு மனைவியும் ராஜன் பெர்னாண்டோ, பற்றீசியா பிறேமினி (ஆசிரியை, யா/வல்வை சிவகுரு வித்தி.), லூற்றீசியா சுபோதினி, முகுந்தன், சந்தியாகோ (Eng.ஆஸ்திரேலியா), உதயன் மாசலீனோ (சவூதி அரேபியா), பிறிஸ்லா ரூபிணி (சுவிஸ்), செலீஷியா நிராஞ்சனி ஆகியோரின் பாசமிகு தாயாரும் இராஜேஸ்வரி, அன்ரன், நிமலேந்திரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் பிறின்சி, தர்மினி, கடநிலா ஆகியோரின் பாசமிகு பாட்டியும், ஜோர்ச் தவராசா (இளைப்பாறிய உதவி காணி ஆணையாளர்), ஜெயராசா (லண்டன்), சிங்கராசா, றெஜினா மேரி, காலஞ்சென்ற யோகராசா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.09.2002) புதன்கிழமை மு.ப.10.00 மணிக்கு தெணியம்மை, வல்வெட்டித்துறையிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, வல்வெட்டித்துறை புனித செபஸ்தியார் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தெணியம்மை,*
*வல்வெட்டித்துறை.* (8126)

தகவல்:
திரு.அ.ஞானானந்தராஜா

### வேலு முத்து
(ஆசாரியார்)

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் வயாவிளானை வசிப்பிடமாகவும் கொண்ட வேலு முத்து அவர்கள் நேற்று (09.09.2002) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் செல்லம்மாவின் அன்புக் கணவரும் சிவராஜா, விக்கினேஸ்வரி, புஸ்பராணி, காலஞ்சென்ற கோபாலம்மா ஆகியோரின் அன்புத் தந்தையும் மகிழம்மா, காலஞ்சென்ற கந்தசாமி (அளவெட்டி) ஆகியோரின் அன்பு மாமனாரும் வினோதன், சிவதீபன், பிரதீபன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.09.2002) செவ்வாய்க் கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**முகவரி:**
*C/O இராசநாயகம் வீடு,*
*தம்பித்துரை வளவு,*
*உரும்பிராய் கிழக்கு.*

தகவல்:
மு.சிவராஜா (மகன்) (8120)



## தென்னிலங்கை உல்லாசப் பயணிகள் பிரபாவின் வீட்டு முற்றத்தில் 'பிடி மண்' எடுப்பதில் ஆர்வம்

வடமராட்சி,செப்.10

குடாநாட்டுக்கு வரும் தென்னிலங்கை மக்கள் சென்று பார்வையிடும் முக்கிய சுற்றுலா மையங்களில் ஒன்றாக மாறியிருப்பது விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் இல்லம்.

வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள அந்த இல்லத்துக்கு தினமும் நூற்றுக்கணக்கான மக்கள் சென்று வருகின்றனர்.

அவ்வாறு செல்வோர் தங்கள் விஜயத்தின் அடையாளமாக அந்த இல்லத்தின் முற்றத்திலிருந்து 'பிடி மண்' எடுத்துச் செல்வதைக் காண முடிகின்றது.

தமிழ் மண்ணை மீட்கப் போராடும் தலைவரின் இல்லத்து மண்மீது தென்னிலங்கை மக்களுக்கு இவ்வளவு பற்றா என்று வியக்கின்றனர் உள்ளூர் வாசிகள். (ஐ-117)

## நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் ஐ.ஜீ.பி. பதவிகளுக்கு விரைவில் நியமனம்

காலியாகவுள்ள நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் பதவிக்கும் பொலீஸ்மா அதிபர் பதவிக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விரைவில் நியமனங்களை மேற்கொள்வார். இதற்கான நடவடிக்கைகளை ஜனாதிபதி மேற்கொண்டு வருகிறார் என்று ஜனாதிபதியின் செயலாளர் கே.பாலபட்டபெந்தி தெரிவித்திருக்கிறார்.

இவ்விரு பதவிகளுக்கும் நியமிக்கப்பட வேண்டியவர்கள் குறித்து தீர்மானம் மேற்கொள்வதற்கு முன் நியமனங்கள் தொடர்பாக ஜனாதிபதி நனகு ஆராயவேண்டியிருக்கிறது எனவும் அவர் கூறியிருக்கிறார்.

அரசமைப்புச் சபையினால் நிராகரிக்கப்படாதவாறு இந்த நியமனங்களை ஜனாதிபதி மேற்கொள்வார் எனவும் ஜனாதிபதியின் செயலாளர் தெரிவித்திருக்கிறார். (ஐ)

ராஜா யாழ்ப்பாணம்.
3-அவது இனத்திரள் வாரம்
ரஜனிகாந், மனிஷா, கவுண்டமணி நடித்த
பாபா
ரிக்கட் கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன.
பல்கனி 60/-, பின்வரிசை 50/-
காட்சிகள்: 10.30, 2.30, 6.00
(C-23796)

நாகம்ஸ் சுன்னாகம்
ஆர்யா, லைலா, ஸ்நேகா நடித்த
உன்னை நினைத்து (ரீகல்)
சனி, ஞாயிறு: 11.00, 3.00, 6.30 (பு.நே.)
(8131)

## நகரில் வான் - ஓட்டோ விபத்து

யாழ்ப்பாணம்,செப்.10

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியால் வந்துகொண்டிருந்த டொல்பின் ரக வான் ஒன்றும் நாவலர் வீதியால் வந்துகொண்டிருந்த ஓட்டோ ஒன்றும் இரண்டு வீதிகளும் சந்திக்கும் சந்தியில் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டதில் ஓட்டோ பலத்த சேதத்துக்கு உள்ளாகியது.

நேற்று நண்பகல் 12.30 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் தெய்வாதீனமாக எவருக்கும் பலத்த காயங்கள் ஏற்படவில்லை.

இச்சம்பவம் குறித்து பொலீஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டதையடுத்து அப்பகுதிக்கு விரைந்த பொலீஸார் சம்பந்தப்பட்ட இரு சாரதிகளையும் பொலீஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர் (ஐ-4)

## நுணாவில் ஆலயத்தில் மீண்டும் வழிபாடு

யாழ்ப்பாணம்,செப்.10

நுணாவில் மேற்கு, விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் தடைப்பட்டிருந்த பூசைவழிபாடுகள் மீண்டும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் ஆலய நிர்வாகத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பூசைகளை மீண்டும் ஆரம்பிக்கும் பொருட்டு நாளை பாலஸ்தாபன அபிஷேகம் நடைபெறவுள்ளது. (ஒ-15)

## வானொலியில் கும்பாபிஷேக நிகழ்வு

யாழ்ப்பாணம்,செப்.10

யாழ். அத்தியடி பிள்ளையார் ஆலயத்தில் நேற்று இடம்பெற்ற கும்பாபிஷேக நிகழ்வுகளின் ஒலிப்பதிவு இன்று இரவு 10 மணிக்கு ஒலிபரப்புக்கூட்டுத்தாபன யாழ். சேவையில் ஒலிபரப்பாகவிருக்கின்றது. (ஐ-5)

நிரஞ்சனாஸ் சங்கானை
இன்று முதல் குதூகல ஆரம்பம்
பிரபுதேவா, ராஜ்சுந்தரம், ஜோதிகா நடித்த
ஒன் ரூ த்ரி
1 2 3 (ரீகல்)
காட்சிகள்: 11.00, 3.30, 6.00 (புதியநேரம்)
(C-23804)

## சமய சந்நிதிகளில்

சுழிபுரம்,செப்.10

சுழிபுரம் மேற்கு ஸ்ரீ ஹரிஹர புத்திர ஐயனார் மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 8.30மணிக்கு நடைபெறவுள்ளது. கும்பாபிஷேக ஆரம்ப கிரியைகள் நேற்றுமுதல் ஆரம்பமாகியுள்ளன.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து பதினைந்து தினங்கள் மண்டலாபிஷேக விழா நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேக பிரதான நிகழ்வான எண்ணெய்க்காப்பு சாத்துதல் எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. (ஒ-28)

★ ★ ★

யாழ்ப்பாணம்,செப்.10

கோண்டாவில் கிழக்கு சபரீஸ ஐயப்பசுவாமி ஆலய மஹா கும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை காலை 6.30 மணிதொடக்கம் 7.31 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில் நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேக தினத்தில் சித்தாந்த பண்டிதர் பிரம்மஸ்ரீ ஜெகதீஸ்வரக் குருக்கள், சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகள் ஆகியோரின் அருளுரைகள் இடம்பெறும். (ஒ-15)

★ ★ ★

யாழ்ப்பாணம்,செப்.10

மட்டுவில் வடக்கு மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை 6.18 மணிக்கு இடம்பெறும். (ஒ-15)

★ ★ ★

அரியாலை,செப்.10

கொழும்புத்துறை மேற்கு வதிரிபீட விநாயகர் ஆலயத்தில் இன்று விநாயகர் சதுர்த்தி திருவிழாவையொட்டி காலை 9 மணிக்கு விசேட அபிஷேகத்துடன் திருவிழா ஆரம்பமாகித் தொடர்ந்து வெள்ளி எலி வாகனத்தில் விநாயகர் உள்வீதி வலம் வருவார். (ஒ-17)

★ ★ ★

அரியாலை,செப்.10

ஈச்சமோட்டை கலட்டிப்புலம் ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு பிற்பகல் 4மணிககு விசேட அபிஷேகமும் தொடர்ந்து, விநாயகர் வீதிவலம் வருதலும் இடம்பெறவுள்ளன. (ஒ-17)

★ ★ ★

ஏழாலை,செப்.10

ஏழாலை மேற்கு, சிவபூதராயர் ஆலய வருடாந்த உற்சவத்தின் இறுதிநாள் சங்காபிஷேக விழா இன்று செவ்வாய்க்கிழமை பகல் 10 மணிககு நடைபெறும். தொடர்ந்து பூந்தண்டிகையில் சுவாமி வீதிவலம் வருவதுடன் சிவத்திரு. குமாரசாமியின் சொற்பொழிவும் இடம்பெறும். (ஒ-ரி)

## பளை தபாலகம் சொந்த இடத்தில் இயங்கும்

யாழ்ப்பாணம்,செப்.10

பளை தபாலகம் கடந்த இரண்டரை வருடங்களின் பின்பு மீண்டும் தனது சொந்தப் பிரதேசத்தில் இயங்கவுள்ளது.

கடந்த 2000ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்தசூழ்நிலையை அடுத்து தற்பொழுது கரவெட்டி தபாலகத்தின் ஒரு பகுதியில் இந்த அலுவலகம் இயங்கிவருகின்றது.


பளைப் பகுதியில் மக்கள் மீளக்குடியமரத் தொடங்கியுள்ளதையடுத்து இங்குள்ள தனியார் கட்டடம் ஒன்றில் எதிர்வரும் 16ஆம் திகதிமுதல் தபாலகம் மீள இயங்கவுள்ளது. (எ-10)

ACE INTERNATIONAL
வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்
எமது நிறுவனத்தில் பதிவுகளை மேற்கொண்டு தங்கள் 'பாஸ்போட்', படம், சான்றிதழ்கள் என்பனவற்றை இன்னும் ஒப்படைக்காதோர் விரைவில் அவற்றை ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
இல. 8, நவீன சந்தை மேல்மாடி, யாழ்ப்பாணம். - முகாமையாளர்.
T.P.: 2405, 077-519440. (8138)

கையடக்கத் தொலைபேசி பாவனையாளர்களே!
யாழ்நகரில் உங்களுக்குத் தேவையான
* சகலவிதமான கையடக்கத் தொலைபேசிகளுக்குமான பாதுகாப்பு உறைகள் (Hand Phone Cover)
* அடையாள மின் குமிழ்கள் (Flash Stickers)
* இயர் போன் (Ear Phone)
* மின் கலங்கள் (Batteries)
கையடக்கத் தொலைபேசிகளின் திருத்தங்களும் தகவல் பதிவு தொடர்பான விளக்கங்களும் எம்மால் வழங்கப்படும்.
அணுகுங்கள்:
ACX®
உள்நாட்டு வெளிநாட்டு துரித தபால் சேவை,
இல.08, நவீன சந்தை (மேல்மாடி),
யாழ்ப்பாணம்.
T.P.: 021-2405 072-519440 (8139)

உ
திருமண அழைப்பு
அன்புடையீர்,
நிகழும் மங்களகரமான சித்திரபானு வருடம் ஆவணி மாதம் 26ஆம் நாள் (11.09.2002) புதன்கிழமை காலை 7.02 மணிமுதல் 8.38 மணிவரைவரும் கன்னி லக்கினமும் வளர்பிறை சுவாதி நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்
எமது புத்திரன் திருநிறை செல்வன் காந்திகரன் (கரன்) அவர்களுக்கும்

எமது புத்திரி திருநிறை செல்வி சிவஸ்திகா (கீதா) அவர்களுக்கும்
இறைவன் துணைகொண்டு வவுனியா கந்தசுவாமி கோயிலில் திருமணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் நடைபெறும் திருமண வைபவத்தில் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து அதனைத் தொடர்ந்து வவுனியா வாடி வீட்டில் நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:
திரு. திருமதி கனகரத்தினம்,
திரு. திருமதி கஜேந்திரன் (ஜேர்மனி),
திரு. திருமதி கிருஸ்ணதாசன் (டென்மார்க்),
திரு. திருமதி சிவஅன்பு (வவுனியா) நிலஅளவையாளர் பணிமனை.
கரன் ஆட்ஸ், சாவகச்சேரி.
நில அளவை விடுதி, பூங்கா வீதி, வவுனியா.
திரு.திருமதி இராசரத்தினம்,
மந்துவில் மேற்கு, கொடிகாமம்.
பூந்தோட்டம், வவுனியா.
(இரு வீட்டார் அழைப்பு) (8134)

உ
திருமண அழைப்பு
அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான சித்திரபானு வருடம் ஆவணி மாதம் 26ஆம் நாள் (11.09.2002) புதன்கிழமை பூர்வபக்ஷ பஞ்சமி திதியும் சுவாதி நட்சத்திரமும்கூடிய சுபதினத்தன்று காலை 8 மணிமுதல் 12 மணிவரையுள்ள சித்தயோக சுபமுகூர்த்தத்தில்
எமது புத்திரன் திருநிறை செல்வன் துயாபரன்

எமது புத்திரி திருநிறை செல்வி சகுந்தலா
ஆகிய இருவருக்கும் இறைவன் திருவருள் துணைகொண்டு தொண்டமனாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் திருமாங்கல்யதாரணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்துள்ளதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
மணமகன் இல்லத்தில் 14.09.2002 சனிக்கிழமை பி.ப. 4 மணிக்கு இடம்பெறும் வரவேற்பு விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
தங்கள் நல்வரவை நாடும்:
திருமதி சந்திரசேகரம் குடும்பத்தினர்
முருகன் கோயிலடி, தம்பசிட்டி வீதி,
புலோலி மேற்கு,
பருத்தித்துறை.
திருமதி வேலாயுதம் (இரத்தினசிங்கம்) குடும்பத்தினர்
மயிலியதனை,
கெருடாவில் வடக்கு,
தொண்டமனாறு.
(இருவீட்டார் அழைப்பு)
(8132)

சாவகச்சேரியில்
ரஞ்சனாஸ் புடவையகம்
மீண்டும் தனது சொந்த இடத்தில்
09.09.2002 தொடக்கம்
இடம் பதித்துள்ளது.
வாடிக்கையாளர்களுக்கு வழமையான சேவைகள் காத்திருக்கின்றன.
- நிர்வாகத்தினர்.
(C/23762)

காரைநகர் ப.நோ.கூ. சங்கம் (வ.து.)
அறிவித்தல்
முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பில் இயங்கிய முல்லை/காரைநகர் ப.நோ.கூ.சங்கம் தாய்ச்சங்கமான யா/காரைநகர் ப.நோ.கூ.சங்கத்துடன் இணைக்கப்பட்ட பின்பு இன்று வரை கடமைக்கு சமுகமளிக்காத முல்லை/காரைநகர் ப.நோ.கூ.சங்கப் பணியாளர்கள் 16.09.2002ஆம் திகதிக்கு முன்பாக சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். குறிப்பிட்ட அறிவித்தலுக்கு அமைய சமுகம் கொடுக்கத் தவறும் பணியாளர்கள் தாமாகவே கடமையில் இருந்து விலகியதாகக் கருதப்படும்.
தலைவர்,
ப.நோ.கூ.சங்கம்,
காரைநகர்.
(C/23761)

# ஜனாதிபதியின் யோசனையையும் உள்ளடக்கி 19ஆவது திருத்தச் சட்டமூலம் நாளைவருகிறது!

## இன்று விசேட அமைச்சரவைக் கூட்டம்

அரசமைப்புச் சட்டத்தின் 19ஆவது திருத்த நகலில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்த யோசனை ஒன்றையும் உள்ளடக்கி அதைப் பூர்த்திசெய்வது என அரசு தீர்மானித திருக்கின்றது.

இந்தச் சட்டமூலத்தின் இறுதி வடிவம் இன்று நடைபெறும் விசேட அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும். நாளை அது வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும்.

நாடாளுமன்றக் கலைப்புத் தொடர்பான ஜனாதிபதியின் அதிகாரங்களை வெட்டுவதற்கு வழிசெய்யும் விதத்தில் இத்திருத்தச் சட்டமூலம் கொண்டுவரப்படுகின்றது.

இந்த அரசமைப்புத் திருத்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை கொண்ட ஓர் அரசை ஜனாதிபதி தனது தற்றுணிவின் அடிப்படையில் கலைப்பதைத் தடைசெய்கின்றது.

அதேசமயம், நாடாளுமன்றம் ஒரு தீர்மானம் கோரினால் அதன்படி நாடாளுமன்றை உடனடியாகக் கலைத்து, புதிய தேர்தலுக்கு உத்தரவிடவும் இத்திருத்தச் சட்டமூலம் வழிசெய்கின்றது.

ஆனால், இந்தத் திருத்தமூலம் தொடர்பாக ஜனாதிபதி குமாரதுங்க ஆட்சேபம் தெரிவித்தார். அது குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் அவர் கடந்த வாரம் ஒரு சுற்றுப் பேச்சும் நடத்தினார்.

நாடாளுமன்றத்தைக் கலைக்கக் கோரும் நாடாளுமன்றத் தீர்மானம், சபையில் அங்கம் வகிப்போரில் அரைவாசிக்குக் குறையாதோரால் அங்கீகரிக்கப்பட்டால் மட்டுமே நாடாளுமன்றம் கலைக்கப்படும் என்ற சாரபட உத்தேசத் திருத்தச் சட்டமூலத்தை மாற்றும்படி ஜனாதிபதி இச்சந்திப்பின் போது கோரினார் எனத் தெரிகின்றது.

மேலதிக யோசனைகள் இருந்தால் அடுத்த இரண்டொரு நாள்களில் தெரிவிப்பதாகவும் அவர் பிரதமரிடம் கூறியிருந்தார்.

ஆனால், 19ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பாக இருவருக்கும் இடையில் இணக்கம் ஏற்படாததால் இருவரும் பின்னர் சந்திக்கவில்லை. ஜனாதிபதியும் புதிய யோசனைகளைத் தரவில்லை. இருவரும் தனித்தனி வழிபோக முடிவுசெய்தனர்.

இந்நிலையில், பிரதமருடனான முதற்சுற்றுச் சந்திப்பில் ஜனாதிபதி தெரிவித்த யோசனைகளை உள்ளடக்கி 19ஆவது திருத்தத்துக்கு இறுதிவடிவம் கொடுக்க அரசு முடிவு செய்தது.

அலரி மாளிகையில் ஞாயிறு இரவு நடைபெற்ற உயர்மட்ட கூட்டத்திலேயே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இத்திருத்தச் சட்டமூலம் நாளை வர்த்த மானியில் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அலரி மாளிகைக் கூட்டத்தில் அமைச்சர்களான கே.என்.சொக்ஸி, கருஜயசூரிய, திலக் மாரப்பன, எஸ்.பி.திஸாநாயக்க, ஐ.தே.க. தவிசாளர் மலிக் சமரவிக்கிரம ஆகியோர் கலந்துகொண்டுள்ளனர். (ஐ)

---

### கரப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம்,செப்.10

புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்தி வரும் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டமும் பரிசளிப்பும் இன்று இரவு 7மணிக்கு கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இறுதிஆட்டத்தில் பங்குபற்றும் அணிகள் விவரம் வருமாறு:-

★ அறுவர் கொண்ட ஓவர் கேம் - உடுப்பிட்டி சிவகுமாரன் வி.க எதிர் வரணி இளைஞர் வி.க

★ நால்வர் கொண்ட ஓவர் கேம்- சிறுப்பிட்டி ஜனசக்தி வி.க எதிர் உடுப்பிட்டி குணசேகரா வி.க

★ செற்அப் ஆட்டம் - ஆவரங்கால் மத்திய வி.க எதிர் ஆவரங்கால் இந்து இளைஞர் வி.க.(ஐ-3)

### பெண்ணின் சடலம்

மட்டக்களப்பு,செப்.10

மட்டக்களப்பு, களுதாவளை கடற்கரையில் 20வயது மதிக்கத்தக்க இளம்பெண் ஒருவரின் சடலம் நேற்று கரையொதுங்கியது. களுவாஞ்சிக்குடி பொலீஸார் இச்சடலத்தை மீட்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

இப்பெண்ணின் கழுத்தில் தங்கச் சங்கிலி ஒன்று காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. சடலம் நிர்வாணமாகக் காணப்பட்டது. என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

### தலைமன்னாரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீன், பிரேத பரிசோதனையை நடத்துமாறு மாவட்ட வைத்திய அதிகாரிக்கு உத்தரவிட்டுள்ளார். சுமார் 35 வயது மதிக்கத்தக்க ஆணின் சடலமே மீட்கப்பட்டிருக்கிறது. சடலம் மிகவும் சிதைந்து காணப்படுகிறது.

பொதுமக்கள் கொடுத்த தகவலை அடுத்தே இந்தச் சடலம் மீட்கப்பட்டது.

மேலும் இரு சடலங்களைத் தாம் தலைமன்னார் கடற்பகுதியில் கண்டதாக அப்பகுதி மீனவர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)

### தமது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொகை வடபகுதி யுத்தத்தில்தான் அதிகமானது.

எதற்கும் அஞ்சாது யுத்தம் செய்த புலிகள் அன்று தலதாமாளிகை, மத்திய வங்கி போன்றவற்றையும் விட்டு வைக்கவில்லை. இந்த யுத்தத்தின் மூலம் நாட்டின் சொத்துக்கள் மட்டுமல்ல ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். முப்பதாயிரம் இராணுவத்தினர் தப்பிச் சென்றனர். இந்தக் கொடூர யுத்தத்தைத் தீர்த்து வைக்க நாட்டுமக்கள் எமக்கு ஆணையிட்டார்கள். அதை நாம் இன்று செயற்படுத்துகிறோம்.

தேரவாத பௌத்தத்தை நாடிச் சென்ற தாய்லாந்தில் இந்தப் பேச்சுக்கள் இடம்பெறுவது எமது நாட்டுக்கு பெருமையாகும். புத்தபகவான் கூறிய பாதையில் சமாதானத்தைத் தேடுவோம்.

அரசியலில் உதைபந்தாட்டம் ஆட நாம் தயாரில்லை. இந்த நாட்டுமக்கள் இன்று எதிர்பார்ப்பதை நடைமுறைப்படுத்தவே நாம் ஆட்சிக்கு வந்துள்ளோம்.

வடக்கில் உள்ளவர்கள் தெற்கை நோக்கியும், தெற்கே உள்ளவர்கள் வடக்கை நோக்கியும் சென்று வருவதைப் பார்க்கும்போது சமாதானத்தை விரும்பும் எவரும் மகிழ்ச்சியடைவர்.

அமெரிக்கா, இங்கிலாந்து, ஜேர்மனி, நோர்வே போன்ற நாடுகள் பேச்சு நடத்துவதை வரவேற்றுள்ளன. சர்வதேச நாடுகள் அனைத்தும் எமது நகர்வுகளை கவனமாக அவதானித்து வருகின்றன.

எமது சமாதான முயற்சிக்கு மக்களின் ஆதரவு எப்படி உள்ளது என்பது மக்கள் எழுச்சிப் பேரணி ஊடாகத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. என்றார் பிரதமர். (ஐ-12)

## கேணல் ராஜுவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரையும் -

நெல்லியடி கரும்புலி மில்லர் நினைவாலயத்தில் மாலை 5 மணி முதல் 6 மணிவரையும் -

பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் மாலை 6.30 மணிமுதல் 7மணிவரையும் -

மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்படும். அங்கு வீரவணக்கக் கூட்டங்களும் இடம்பெறும்.

வித்துடல் எடுத்து வரப்படும் வழியில் யாழ்.நகரின்முக்கிய வீதிகளையும் கடந்து செல்லும்.

நகரில் இரண்டாம் குறுக்குத் தெரு, வேம்படிச்சந்தி, ஆஸ்பத்திரி வீதி, சத்திரச்சந்தி, கே.கே.எஸ் வீதி, ஸ்ரான்லி வீதி, கஸ்தூரியார் வீதி ஆகிய வீதிகள் வழியாகவும் வித்துடல் எடுத்துச்செல்லப்படும்.

யாழ்.இந்துக் கல்லூரியில் மக்கள் அஞ்சலி பூர்த்தி அடைந்ததும் பேழை அங்கிருந்து காங்கேசன்துறை வீதியூடாக சுன்னாகத்திற்கு எடுத்துச் செல்லப்படும். பின்னர் அங்கிருந்து மருதனார்மடம் சந்தி, உரும்பிராய் சந்தி, கோப்பாய் சந்தி, பருத்தித்துறை வீதியூடாக நெல்லியடிக்கு எடுத்துச்செல்லப்படும். பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் இடம்பெறும் நிகழ்வுடன் அஞ்சலி நிறைவுபெறும்.

கேணல் ராஜுவுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக குடாநாட்டில் இன்று துக்கம் அனுஷ்டிக்கப்படும். வர்த்தக நிறுவனங்கள், பொதுக்கட்டங்களில் சிவப்பு - மஞ்சள் வர்ணக் கொடிகள் பறக்கவிடப்படும்.

சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் ஏனைய கூட்டுறவு அமைப்புக்களும் தத்தமது கட்டடங்களில் சிவப்பு - மஞ்சள் வர்ணக் கொடிகளைக் கட்டி அஞ்சலி செலுத்துமாறு யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் கேட்டிருக்கிறார்.

வர்த்தகர்கள் அனைவரையும் ஒருமணிநேரமாவது அஞ்சலி நிகழ்வுகளில் பங்கு பற்றுமாறும் வர்த்தக நிலையங்களில் சிவப்பு - மஞ்சள் நிறக் கொடிகளைப் பறக்கவிடுமாறும் யாழ்.வணிகர் கழகம் கேட்டிருக்கிறது.

கேணல் ராஜு"வின் வித்துடல் நாளை முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்படும். (ஐ-3-17)

### சமாதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் கூட்டம் கொழும்பு தும்முல்லைச் சந்தி, ஒறுகொடவத்தை, பொரளை, சுகததாஸ விளையாட்டரங்கு ஆகிய இடங்களில் ஒன்று திரண்டனர்.

இ.தொ.கா., மலையக மக்கள் முன்னணி, மேல்மாகாண மக்கள் முன்னணி ஆகியவை தனித்தனி ஊர்வலங்களை நடத்தி, பிரதான பேரணிகளுடன் பின்னர் இணைந்துகொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இ.தொ.கா. ஊர்வலம் ராஜகிரியவிலிருந்து புறப்பட்டது. பல்லாயிரக் கணக்கான மலையக மக்கள் இந்த ஊர்வலத்தில் பங்குபற்றினர். சமாதானக் கோஷங்களை முழங்கியவாறு ஊர்வலம் பொரளைச் சந்தியை அடைந்து பிரதான பேரணியுடன் சங்கமித்தது.

மலையக மக்கள் முன்னணியின் ஊர்வலம் ஐந்துலாம்புச் சந்தியிலிருந்து ஆரம்பமாகி சுகததாஸ விளையாட்டரங்கைச் சென்றடைந்தது. அங்கு பிரதான பேரணியுடன் இணைந்து, மாநகரசபை முன்றிலை நோக்கிப் பயணமானது. இந்த ஊர்வலத்தில் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் அ.விநாயகமூர்த்தி எம்.பியும் கலந்துகொண்டார்.

மேல்மாகாண மக்கள் முன்னணியின் ஊர்வலம் பாங்ஷால் வீதியிலிருந்து புறப்பட்டு சுகததாஸ விளையாட்டரங்கை சென்றடைந்தது. முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தலைமையிலான இந்த ஊர்வலத்தில் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டனர். (ஐ-3-12)


இதோ பிரிவு II ஆரம்பம!

யாழ்.மாணவர்களுக்கான

வங்கியியல் கற்கைநெறி

B.Sc. (Hons) Degree & ACIB

DBF, ACBF, CBF

வகுப்புகள் ஆரம்பம்.

விண்ணப்ப முடிவு திகதி:

10.09.2002

Jaffna College Undergraduate Dept.

464, Hospital Rd,

Jaffna.

(சி-23673)



Computer Courses

New Batches Start on : 14/09/2002 Saturday at 9.00 am

| Courses | Duration (Month) |
|---|---|
| Diploma in MS Office | 5 |
| Diploma in Internet Technology | 4 |
| Diploma in Java Programming | 5 |
| Diploma in Visual C Programming | 4 |
| Diploma in Visual Basic Programming | 4 |
| Diploma in Engineering Drawing and AutoCAD | 5 |
| Diploma in Computer Programming | 8 |
| Technician Diploma in Computer Hardware | 6 |
| Advanced Diploma in Applied Computer Science | 12 |

பயிற்சி நெறிகள் அனைத்தும் வார நாட்களிலும் வார இறுதி நாட்களிலும் நடைபெறும்

Institute of Informatics Studies

Head Office: 100, Clock Tower Road, Jaffna. ☎ 021-2831 Email : iis@slt.net.lk

Branches: Nelliyady Karaveddy. Main Street, Chankanai.



எமது புதிய வீடியோ CD வெளியீடு

கிருத்திக், சுதா நடித்த '+2'

(பிரதிகள் உடன் பெறலாம்)

வீடியோ விமல்,

யாழ்ப்பாணம்.

(C/23763)



புலமைப் பரிசில் திட்டம் 2001/2002

மேற்படி புலமைப்பரிசுத் திட்டத்தின்கீழ் தெரிவுசெய்யப்பட்டு, இதுவரை பதிவினை மேற்கொள்ளாத நெல்லியடி, சங்கானைக் கிளைகளில் கற்கவிரும்பும் சகல மாணவர்களும், உங்களுக்கான விசேட கற்கைநெறிகள் ஆரம்பமாகவிருப்பதால் உடனடியாக உங்களது கிளை நிறுவனங்களுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

இயக்குநர்,

IIS - யாழ்ப்பாணம். (C/23765)



எமது புதிய வீடியோ CD வெளியீடு

அறிமுகம் கீர்த்திக், சுஜா நடித்த '+2'

மோகன்லால் நடித்த 'உறவு'

(பிரதிகள் உடன் பெறலாம்)

புதிய திரைப்படப் போஸ்டர்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

ITN பலாலி வீதி, யாழ்ப்பாணம். (C/23764)



CHAMBER OF COMMERCE & INDUSTRY OF YARLPANAM

and

Micro and Small Enterprise Development (MSE)

இணைந்து நடத்தும்

பயிற்சிப் பட்டறை (Work Shop)

(சிறிய, குடிசைக் கைத்தொழில்களை யாழ். மாவட்டத்தில் அபிவிருத்தி செய்யும் நோக்குடன்)

பயிற்சியாளர் : Mr.H.M.Ranasinghe

சிறிய நடுத்தர கைத்தொழில் அபிவிருத்தித் திட்ட முகாமையாளா

காலம் : 11 September 2002 புதன்கிழமை

நேரம் : காலை 8.30 - 2.00

இடம் : City Hall (Bazaar Street, Jaffna)

சிறிய, நடுத்தர, குடிசைக் கைத்தொழிலில் ஈடுபடும் ஆவலாளர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

(C/23754) Executive Committee of CCIY.


## மரண அறிவித்தல்

### முத்து சுப்பிரமணியம்

தாவடி தெற்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கு, ஞானபண்டித வித்தியாசாலையடியை வதிவிடமாகவும் கொண்ட முத்து சுப்பிரமணியம் அவர்கள் நேற்று (09.09.2002) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் ராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் தீனதயாபரன்(இத்தாலி), சர்வதயாபரன்(இத்தாலி), ஜெயவதனி, ஞானதயாபரன், ஜீவதயாபரன், ஜெயறமணி, கிருபதயாபரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் தங்கவேலு, ஞானேந்திரன் (நதி வாச் அண்ட் ரேடியோ உரிமையாளர்), சாந்தினி (இத்தாலி), சாந்தா(இத்தாலி), சாந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும் திருமதி மனோன்மணி நவரத்தினம், காலஞ்சென்ற அன்னலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் சாலினி, யெனார்த்தனி, கீர்த்திகன், நிதர்சனன், கோபிகா, கோபிசாலினி, உஷாசாயினி, திவாகரி, மதன், விதுர்ஷன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.09.2002) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(8140)

தகவல்:-
மனைவி

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.09.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.